
# காஞ்சி

ஆசிரியர்
அண்ணதுரை

13-3-66

20
காசு



தளபதி
பரமசிவம் குமாரமங்கலம்

தம்பி

# 'கனா' நிகழ்ச்சி - ஒரு எச்சரிக்கை!

நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்ட நாசகாலன்!
பொருளாதாரத் துறையைப் பாழ்படுத்தினவன்
மக்களைப் பட்டினி போட்டுச் சாகடித்த பேயன்
எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்டிய வெறியன்
ஆடம்பர வாழ்வு நடாத்திய எதேச்சாதிகாரி
எல்லாம் தனக்குத் தெரியும் என்று உறுமிய அகம்பாவக்காரன்
ஏன் என்று கேட்பவர்களைச் சிறையில் தள்ளி வாட்டி வதைத்த காதகன்
ஆளத்தெரியாதவன்! அகப்பட்டதைச் சுருட்டுபவன்! ஆணவக்காரன்!
'இருப்பை'த் தொலைத்துவிட்டான், நாட்டைக் கடனாளியாக்கிவிட்டான்.
வீண் பெருமைக்காகப் பணத்தை விரயம் செய்தான்
தொழில் கெட்டது! விவசாயம் பாழ்பட்டது! வகையற்ற ஆட்சி நடத்தியதால்,

இன்று கனா நாட்டிலே இவ்விதம் பேசிக்கொள்கிறார்கள், எழுதுகிறார்கள், நிக்ருமாவைப் பற்றி. ஆட்சியை ராணுவம் கைப்பற்றிக்கொண்ட பிறகு ஒரு புரட்சி சர்க்கார் அமைத்தான பிறகு பதவியைப் பறிகொடுத்துவிட்டு, வேறு நாட்டிலே 'தஞ்சம்' புகவேண்டிய நிலைக்குத் துரத்தப் பட்டுவிட்ட நிக்ருமாவைப்பற்றி மிக வன்மையாகக் கண்டிக்கிறார்கள்; அவன் ஆட்சியின கேடுகள்பற்றி, கொடுமைகள்பற்றி அடுக்கடுக்காக எடுத்துரைக்கிறார்கள்.

மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்
பட்டாளிகள் களிப்படைந்துள்ளனர்
மாணவர்கள் மமதையாளன் தொலைந்தான் என்று எக்காளமிடுகின்றனர்.
அதிகாரிகள்கூட அகமகிழ்ச்சி கொண்டுள்ளனர்


என்றெல்லாம் கூறப்படுகிறது.

இவற்றில் பெரும்பகுதி, புரட்சி சர்க்காரின் 'பிரச்சார'த் தாக்குதலாக இருக்கக்கூடும்; மிகைப்படுத்திக் கூறுவதாக இருக்கக்கூடும். ஆனால் இந்தக் கண்டனத்தில் துளியும் உண்மை இல்லை என்று ஒரே அடியாகக் கூறிவிட முடியாது.

நிக்ருமாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது, 'ஐயோ' என்று சொன்னவர்களோ, எப்படி அந்த ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று கேட்டவர்களோ அதிகம்பேர் இருந்ததாகத் தெரியவில்லை.

அவருக்காக எமது உயிரையும் கொடுப்போம்! எமது பிணத்தின் மீது நடந்து சென்றுதான் அவர் அமர்ந்திருந்த அரியணையைத் தொடமுடியும் உங்களால் என்று 'வீரம்' பேசியவர்

(4-ம் பக்கம் பார்க்க)



காஞ்சி

மலர் 2 13—3—66 இதழ் 33

# மாமருந்து

'இட்டிலி' இந்த ஆட்சியில் எவ்வளவு இளைத்துப் போயிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார் நண்பர் மதியழகன், சென்னை சட்ட மன்றத்தில்.

இளைத்துப்போன மக்கள், எலும்புக் கூடாகிவிட்ட ஏழையர், மரக்கிளையை அல்லது ஆழ்குளத்தைத் தேடிடும் மனம் உடைந்த நிலையினர், உழைத்து உருக்குலைந்து போயுள்ளவர்கள், குழந்தையையும் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ளும் மாதாக்கள் ஆகியோரை மதியழகன் சட்டசபை அழைத்துச் சென்று காட்ட முடியுமா! இட்டிலி இளைத்துக் கிடப்பதையாவது கண்ணால் காணட்டும், அதுபற்றியாவது எடுத்துக் காட்டுவோம் என்று எண்ணினார் போலும்.

டில்லிப் பாராளுமன்றத்தில் உணவுப் பிரச்சினை விவாதிக்கப்பட்டபோது கேரளத்து உறுப்பினர் ஒருவர் கேரளத்தில் தரப்படும் அரிசியின் அளவு எப்படி இருக்கிறது என்பதை மாமன்றத்தினர் தெரிந்துகொள்வதற்காக, ஒரு சிறு பொட்டலத்தை எடுத்துக் காட்டினார்.

காங்கிரஸ் கட்சி முதலாளிகளிடம் தேர்தல் நிதி வசூலிக்கிறது என்பதைவிளக்கிட, மாநிலங்கள் அவையிலே ஒரு உறுப்பினர், காங்கிரஸ் கட்சிக்குப் பொருளாளராகவும் அதேபோது இந்தியப் பேரரசின் அமைச்சராகவும் உள்ள பெரியவர் முதலாளிகளுக்கு அனுப்பியிருந்த தனி சுற்றறிக்கையைப் படித்துக் காட்டினார்.

ஒரிசா மாநில முன்னாள் முதலமைச்சர் பட்நாயக் பற்றி இந்தியப் பேரரசினர் அமைத்த அமைச்சர் குழு தீட்டிய இரகசிய அறிக்கையையே பாராளு மன்ற உறுப்பினர் எடுத்துவந்து படித்துக் காட்டினார்.

இவற்றினைக் கூறுவதற்குக் காரணம், இவற்றை எல்லாம் காட்டும்போது இட்டிலியை சட்டமன்றம் எடுத்துச் சென்று காட்டினால் என்ன என்று கேட்டிட அல்ல, அது முறை தவறு என்று சட்டமன்றத் தலைவர் கூறிவிட்ட பிறகு, அதற்கு மாறுபாடான கருத்து முறையுமாகாது. அதற்காக இதனைக் குறிப்பிடவில்லை.

மதியழகன் இட்டிலியைக் காட்டியது, முறையற்றது என்று சட்டமன்றத் தலைவர் தந்துள்ள கருத்துக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; நமது ஆளவந்தார்களுக்கு வெறும் பேச்சுமட்டும் உண்மையை உணர்ந்துகொள்ளப் போதுமானதாக இல்லை என்று மதியழகன் கருதிடவேண்டிய விதமாக நாட்டு நிலைமை நலிந்து வருவதுபற்றி எத்தனை விளக்கமாக எடுத்துரைத்தாலும் ஆளவந்தார்கள் 'ஏனோதானோ' என்று இருப்பதும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவதுமாக இருக்கின்றனர். இது நல்லாட்சிக்கும் அடையாளமல்ல; இந்தப் போக்கு நல்லதற்கும் அல்ல என்பதை மட்டும் கூறிக்கொள்கிறோம்.

எதிர்க்கட்சியினரின் எந்த முறையீட்டினையும் பொருட்படுத்தாத போக்கினை ஆளும் கட்சியான காங்கிரஸ் மேற்கொண்டுவிட்டிருப்பதன் விளைவாக வங்க சட்டமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்றுள்ள அமளி பற்றி எவரும் பெருமைகொள்ளவும் முடியாது, அதன் ஆபத்தான விளைவுபற்றி அலட்சியப்படுத்தவும் முடியாது. இரத்தம் ஒழுகும் அளவுக்கு அடிதடி, அமளி! காவலரைவிட்டு குண்டுக்கட்டாகத் தூக்கிச்செல்லும் விதமான நிலைமை. அமைச்சர்களைப் பிடித்திழுத்துத் தள்ளுவது, அவர்கள் வசம் உள்ள அறிக்கைகளைப் பறித்துக் கிழித்து எறிவது என்பன போன்ற அலங்கோலம் நடைபெற்றிருக்கிறது.

சட்டமன்றத் தலைவர் எல்லோராலும் மதிக்கப்படவேண்டும் என்பதும்; அவருடைய ஆணைக்கு அனைவரும் பணிந்தாகவேண்டும் என்பதும் எந்தஜனநாயகவாதியும் மறுக்கக்கூடாத பண்பு.

வங்கத்தில் சட்டமன்றத் தலைவர் பட்டபாடுபற்றி படித்திடும்போது, ஜனநாயகத்தின் எதிர்காலம் பற்றியே எவருக்கும் ஐயப்பாடு எழும். அவருடைய 'ஆணைக்கோல்' எடுத்தெறியப்படுகிறது, ஒளித்து வைக்கப்படுகிறது. உடைத்துப் போடப்படுகிறது. அவரைச் சூழ்ந்துகொள்கிறார்கள்; சூடான வார்த்தைகள் மட்டுமல்ல, நரகல் வார்த்தைகளையே வீசுகிறார்கள்.

வங்கம் மட்டுமல்ல, காங்கிரசாட்சி நடைபெறும் பல இடங்களில், இந்த நிலை வளர்ந்து தலைவிரித்தாடுகிறது.

இரு மாநிலங்களில், சட்டமன்றத் துவக்கத்துக்காக வந்திருந்த கவர்னர், பேருரை ஆற்றுகையில் அமளி நடைபெற்றிருக்கிறது.

வங்கத்திலும், கருநாடகத்திலும் சட்டமன்றத்திற்கு உள்ளேயே, கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன!

காங்கிரஸ் ஆட்சி ஒழிக!
கொலைகார ஆட்சி ஒழிக!
கோணல் ஆட்சி ஒழிக!
பொய்யன்! புரட்டன்! புளுகன்!

இப்படிப்பட்ட 'லாவணிகள்' பல சட்டமன்றங்களில்,

காரணம் என்ன இந்தக் கண்றாவிகளுக்கு? முறை தெரியாததாலா? அல்ல! சட்ட மன்ற உறுப்பினர்கள் கூடுவது நாட்டுக்கே முறை வகுத்தளித்திட. எனவே முறை அறிவர்! ஆயின் ஏன் முறைதவறி நடந்து

## யாரிடம் கேட்கிறார்?

இந்த நாட்டில் பஞ்சம் இல்லை; பற்றாக்குறை தான் நிலவுகிறது. பற்றாக்குறையைப் பெரிதுபடுத்திக் காட்டி, நாட்டை பயமுறுத்துவோர்களைக் கேட்கிறேன்; உணவில்லாமல் செத்துப்போனவர்கள் எத்தனைப் பேர்? பட்டினிக் கொடுமையால் உயிரிழந்தவர்கள் தொகை என்ன?

—லெட்சுமிகாந்தம் அம்மாள், எம். எல். ஏ. (காங்.)

கொள்கின்றனர்? தங்களின் நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்படுவதால், உண்மையான வாதங்கள் அலட்சியப்படுத்தப்படுவதால், யோசனைகள் நிராகரிக்கப்படுவதால், ஏற்பட்டுவிடும் எரிச்சல், அவர்களை எதை எதையோ செய்திடத் தூண்டுகிறது.

ஆனால் இதனால் பலன் என்ன விளையும்? முறை கெடும்; சீர்குலைவு ஏற்படும். ஆளவந்தார்களின் போக்கை மாற்ற இந்த முறையற்ற செயல்கள் பயன்படவே செய்யாது. அவர்தம் போக்கை மாற்றவல்லவர்கள், மாற்றிடும் உரிமைபெற்றவர்கள், அதற்கேற்ற ஆற்றல் பெற்றவர்கள் பொதுமக்களே! அவர்களிடம் முறையிட்டு, அவர்களிடம் எழுச்சி ஊட்டி, இன்றைய ஆணவ அரசினை அடுத்துவரும் பொதுத் தேர்தலின் போது மண்கவ்வச்செய்திடவேண்டும். நோய் தீர்க்கும் மாமருந்து தேடிடும் நாள் விரைந்துவருகிறது. அதற்கு மக்களைத் தயாராக்கிடும் பணியினை ஜனநாயகவாதிகள் அனைவரும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும். அதிலே வெற்றிகிட்டினால், இளைத்த இட்டிலி மட்டுமல்ல, மாடாக உழைதது ஓடாகிப் போயுள்ள மக்களும் இளைப்பு களைப்பு நீக்கப்பட்டு புது வாழ்வு முழு வாழ்வு, நல்வாழ்வு பெறுவர்.

முகப்பில்:

## தளபதி பரமசிவம் குமாரமங்கலம்

அண்மையில், இந்திய இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெறப்போகும் ஜெனரல் சௌத்ரிக்குப் பதிலாக, பதவி உயர்வு பெறப் போகும் தற்போது துணைத் தளபதியாக இருக்கும் பரமசிவம் குமாரமங்கலம், இக்கிழமை, இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கிறார்.

தளபதி பி. பி. குமாரமங்கலம் அடுத்த ஜூன் 10-ஆம் நாள் பதவி ஏற்பார்; அதே நாளில் சௌத்ரி பதவியிலிருந்து ஓய்வுபெறுவார். தளபதி குமாரமங்கலம் இப்பதவியில் மூன்றாண்டுக்காலம் இருப்பார். இதுவரையில் இப்பதவியின் காலவரை நான்கு ஆண்டுகளாக இருந்தது; அண்மையில் தான் இது மூன்றாண்டுகளாகக் குறைக்கப்பட்டது. குமாரமங்கலத்துக்கு தற்போது 53 வயதாகிறது.

இரண்டாவது உலகப் போரின்போது இவர் இத்தாலியில், எதிரிகளால் சிறை பிடிக்கப்பட்டு, அங்கிருந்து தப்பி, மீண்டும் ஜெர்மனியில் கைது செய்யப்பட்ட சம்பவம் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்திய இராணுவத்தின் பல பிரிவுகளிலும் பல உயர் பதவிகள்வகித்த இவர், பீரங்கி இராணுவப் படையில் விசேஷ அனுபவம் உடையவர்.

இறுதியாக அவர் 1964ல் இந்திய இராணுவப் படையின் உப-தளபதியாகவும் 1965ல் துணைத் தளபதியாகவும் பதவி உயர்வு பெற்றார்.

பி. பி. குமாரமங்கலம் ஒரு இராணுவத் தளபதி மட்டுமல்ல; நல்லதொரு போலோ (குதிரைமீதிருந்து ஆடும் ஒருவகை பந்தாட்டம்) ஆட்டக்காரர்; கிரிக்கெட் விளையாட்டுப் பிரியருங்கூட.

காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயனின் குமாரரும், கம்யூனிஸ்டுத் தோழர் மோகன் குமாரமங்கலத்தின் சகோதரருமான இவருக்கு நாய் வளர்த்தல், குதிரை வளர்த்தல் முதலானவைகளிலும் அதிக ஆசை உண்டாம்!!

2ம் பக்கத் தொடர்ச்சி

களையும் அதிகமாகக் காணோம்; தியாகம் புரிய முன் வந்தவர்களும் இல்லை.

ஆட்சி கவிழ்க்கப்படுகிறது! புதிய புரட்சி சர்க்கார் அமைக்கப்படுகிறது! கனா நாட்டு மக்கள், இது நடைபெற வேண்டியதுதான் என்றமுறையில் இருந்துவிட்டிருக்கிறார்கள்.

பெரியதோர் உருவச் சிலை; கரத்தை உயர்த்திக் காட்டிய நிலையில்; விண்ணை நோக்கிய பார்வையுடன் அமைந்த சிலை; நிக்ருமாவின்சிலை; நிக்ருமாவே திறந்து வைத்த சிலை! அதைக் கீழே தள்ளி உடைத்துப்போட்டிருக்கிறார்கள்; தலை துண்டிக்கப்பட்டுப் போயுள்ள அந்தச் சிலை தரையிலே உருட்டப்பட்டுக் கிடக்கிறது; அதைச் சிறுவர்கள் சூழநின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! நேற்றுவரை நாட்டை ஆண்டு வந்தவன் சிலை நொறுக்கப்பட்டுக் கிடக்கிறது; ஆத்திரம், ஆவேசம், அழுகை எதுவும் காணோம்.

இதுகூட அல்ல விசித்திரம், இந்த அளவு கண்டிக்கப்படும் நிக்ருமா ஆட்சியில் இருந்தபோது—கடைசி நாள் வரையில்—இதே மக்கள் 'பயபக்தி விசுவாசம்' காட்டி வந்தனர்.

கண்கண்ட தெய்வம் என்று கொண்டாடினர்.

ஏழைகளை வாழ்விக்க வந்த எம்மான் என்றனர்.

நாட்டை உய்விக்க வந்த பெம்மான் என்றனர்.

அவர் ஆற்றலை அவனி அறியும் என்றனர்.

ஆங்கிலர்க்கு அவருடைய பெயரைக் கேட்டாலே நடுக்கம் என்றனர்.

அவர் கனா நாட்டை மட்டுமல்ல, அடிமைப்பட்டுள்ள நாடுகளை எல்லாம் விடுவிக்க வல்ல தீரர் என்றனர்.

அவர் ஒரு நாட்டுத் தலைவர் மட்டுமல்ல, எழுச்சி பெற்ற ஆப்பிரிக்கக் கண்டத்துக்கே வழிகாட்டி என்றனர்.

கருப்பருக்குப் புதுவாழ்வு தந்திட அவதரித்தவர் என்றனர்.

தீரம்—தியாகம் — ஆற்றல் — ததும்பும் புதிய வரலாறு படைத்திடும் பெரியோன் என்றனர்.

அவர் கரம் அசைத்தால் போதும், நாடு கட்டுக்கு அடங்கும்! அவர் சொல் கேட்டால் போதும்! படைகள் எட்டுத் திக்கிலிருந்தும் கிளம்பும் என்றனர்.

தன்னலமற்றவர்! தாயகம் வாழ்ந்திடத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றனர்.

இவற்றிலே குறிப்பிடத்தக்க பகுதி, நிக்ருமா ஆட்சியிலே நடத்திவைக்கப்பட்ட 'பிரசாரம்' என்று கூறப்படலாம்; ஆனால் மக்கள் காட்டியதாகக் கூறப்படும் கனிவு முழுவதுமே 'போலி'யாக இருந்திருக்க முடியாது.

போலி எந்த அளவு, உண்மை எந்த அளவு என்பது எதிர்கால வரலாற்றுத் துறையினர் கண்டறிய வேண்டிய ஒன்று! இன்று ஒன்று நன்றாகத் தெரிகிறது,

புகழாரம் சூட்டப்பட்டு விட்டிருப்பதாலேயே, புனிதன் என்று விருது வழங்கப்பட்டு விட்டிருப்பதாலேயே கவிழ்க்கப்பட முடியாதவன், காலமெல்லாம் நிலைத்திருக்கத் தக்கவன், என்று கூறிவிடுவதற்கில்லை. பெருமரம் வீழ்த்தப்படக்கூடும்—புயலின் வேகத்தால்! எம்மான் என்றும் பெம்மான் என்றும் புகழப்பட்டவனே எத்தன் என்றும் பேயன் என்றும் கண்டிக்கப்படக்கூடும். உதடும் உள்ளமும் உறவு கொள்ளாமல், வெறும் ஓசை மட்டும் கிளம்பியபடி இருக்கக்கூடும்.

கனு நாட்டிலே நடைபெற்றுள்ள திடுக்கிடத்தக்க நிகழ்ச்சி, அந்த நாட்டுக்கு மட்டுமல்ல, எம்மை அசைத்திடவும் ஆகாது எவராலும்! என்று இறுமாந்து கிடந்திடும் பெருந் தலைவர்கள் எக்காளம் கிளப்பிடும் எந்த நாட்டுக்கும், ஒரு பாடம்; ஒரு எச்சரிக்கை, ஒரு அபாய அறிவிப்புத் தருவதாக அமைந்திருக்கிறது.

விடமாட்டேன்! புரட்சிக்காரரைப் பொசுக்கியே தீருவேன்! காலம் வரும்; வெகுவிரைவில், கனுநாட்டில் வெற்றி நடைபோடுவேன் என்று வீரம் பேசுகிறார் நிக்ருமா!! இன்றே அவர் ஒரு 'முன்னாள்' ஆக்கப்பட்டுப் போய்விட்டிருக்கிறார். மீண்டும் கனுவை அவர் கைப்பற்றி பீடம் ஏறி அமர்ந்து, 'வட்டியும் முதலுமாக' புரட்சி நடத்தியவர்களைத் தீர்த்துக் கட்டிவிட்டு, பழயபடி அரசாளத்தொடங்கினாலும்,இப்போது நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி இருக்கிறதே, அது இதயத்தில் ஏற்படுத்தியுள்ள 'வடு' மறையவே மறையாது. இவ்வளவு தானா இவர்களின் வாழ்வு! உலகம் பேசுகிறதே, அந்த ஏளனம் மாறுது. மீண்டும் கனுநாட்டு அதிபராக அவர் வருவதும் நடைபெறக் கூடியதாக இப்போதைக்குத் தெரியவில்லை. ஆப்பிரிக்காவிலே பெரியதோர் போர் மூண்டெழும் என்றாலும் கவலையில்லை என்று துணிந்து வல்லரசுகள் அவருக்காக வரிந்து கட்டிக்கொண்டு படைதிரட்டி வந்தாலொழிய.

ஆப்பிரிக்க நாடுகளிலே சில, 'இது அக்ரமம்! நிக்ருமா வீரன், தீரன், தியாகி, அவரை விரட்டுவதா! இது அநீதி! அவருக்காக நாங்கள், எதையும் செய்திடத் தயார்!! என்று கூறிய போதிலும்—கயனா நாட்டு அதிபர், தமது 'முடி'யை நிக்ருமாவின் காலடியில் வைத்து விட்டதாகத் தெரிவிக்சப்பட்டிருக்கிறது—ஐக்கிய குடி அரசுத் தலைவர் நாசர் 'மேல்மட்ட'த்தவர்களுக்கு இது குறித்து 'மடல்' விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது—ஆப்பிரிக்க நாடுகளிலே மிகப் பல புதிய சர்க்காரை ஏற்றுககொண்டுவிட்டன!

நிக்ருமா, தன்னை ராணுவப் புரட்சிக் குழுவினர் கவிழ்த்துவிட்டனர் என்றும அறிந்துகொள்ளாமல் 'ராஜோபசாரம்'பெற சீனா சென்றபோது, அந்த நாட்டிலுள்ள கனு தூதரகம, புதிய சர்க்காருக்குக் கட்டுப்பட்டுவிட்டதாகத் தெரிவிதது, நிக்ருமாவை 'அதிபர்' என்ற முறையில் வரவேற்க இயலாது என்று அறிவிததுவிட்டது.

சீனத் தலைவர்கள், கனு நாட்டு விடுதலை வீரனே! வருக! ஏகாதிபத்திய எதர்ப்பு முன்னணி நிற்போனே! வருக! மேற்கத்திய நாடுகளின் அகம்பாவத்திற்கு அஞ்சாத தீரனே! வருக! என்று வாழ்த்தி வரவேற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில், சீனாவில் அமைந்துள்ள கனு தூதரகத்தினர், தமது அலுவலக நுழைவு வாயிலில் தொங்கவிடப்பட்டிருந்த அதிபர் நிக்ருமாவின் படத்தை அகற்றிக் கொண்டிருந்தனர். அவர் 'காலம்' முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக.

## கணக்குக் கேட்கிறார்...

திங்கட்கிழமை இரவு பட்டினி கிடக்க வேண்டும்....

வியாழக்கிழமை இரவு பட்டினி கிடக்க வேண்டும் ...

உணவுப் பழக்கத்தை மாற்றித் தான்யங்கள் புசிக்க வேண்டும்....

ஏன் தெரியுமா?

இந்த ஆண்டு கவலை தரத்தக்க அளவு உணவுப் பஞ்சம் ஏற்படலாம்!

இந்திய அரசு அறிவிக்கிறது இப்படி.

ஆனால்

லெட்சுமிகாந்தம் அம்மையார், (காங்--எம்.எல்.ஏ.) கேட்கிறார்!

பட்டினியால் செத்தவர்கள் எத்தனைப் பேர் என்று!!!

நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி நிக்ருமாவுக்கு அடக்க முடியாத ஆத்திரத்தை மூட்டிவிட்டிருக்கும். அதனை அனைவரும் உணர்ந்துகொள்ளமுடியும; ஆனால் மீண்டும் கனு அதிபர் ஆவேன் என்று முழக்கமிடுகிறாரே அதனை ஒப்புக்கொள்ள பலநாடுகள் தயாராக இல்லை.

புதிய கனு சர்க்காரை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டுவிட்டது.

நிக்ருமா ஆட்சியைக் கவிழ்க்க கனு நாட்டு ராணுவத் தலைவர்கள இரகசிய நடவடிக்கையில் முனைந்திருக்கும்போதுதான, உலகில் சமாதானம் மலரச் செய்திட, குறிபபாக வியட்நாம் போர்பற்றிய பிரச்சினையைத் தீர்த்துவைக்க 'புனிதயாத்திரை' மேற்கொண்டிருந்தார் நிக்ருமா.

புதுடில்லி விமான நிலையத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடன் உலகப் பிரச்சினைகள் பற்றிக் கலந்து பேசினார்; கனு நாட்டுக்கு 'வருகை' தரும்படி இந்திரா காந்தி அவர்களையும் அழைத்திருக்கிறார்.

இவர் இங்கு உலகப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொணடிருக்கும்போது, அங்கே இவரை 'ஒழித்துக் கட்ட' வேலை நடந்து கொண்டிருந்திருக்கிறது.

ராணுவத்தார் எத்தனைத் திறமையுடன் தமது 'புரட்சி'த் திட்டத்தை எவரும கண்டறிய முடியாதபடி வகுத்துள்ளனர் என்பதைக் காணுமபோது வியப்பாகவே இருக்கிறது.

துளியாவது, 'குறி' தெரிந்திருக்குமானால், வாடை அடித்திருக்குமானால் நிக்ருமா நீண்டதோர் பயணத்தை மேற்கொணடிருந்திக்கமாட்டார்; இரண்டில் ஒன்று பார்த்துவிடுவோம என்று துணிந்திருக்கக்கூடும்; ராணுவப் புரட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருப்பின் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பர்; அவர்கள் வெற்றிபெற்றிருப்பின், சிலைக்கு நேரிட்டகதி நிக்ருமாவுக்கே நேரிட்டிருக்கக்கூடும்.

துளியும் திட்டம் வெளியே தெரியாதவண்ணம் தீட்டியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, காட்டிக் கொடுக்கும் எண்ணமும் துணிவும் கொண்டவர்கள் யாரும், ராணுவத்தின் எந்த மட்டத்திலும் இல்லை என்பதும் இதனால் விளக்கமாகிறது.

ஆகவே இந்தப் புரட்சி, யாரோ சில விரல்விட்டு எண்ணக்கூடிய 'வெறியர்' நடத்தியதாகத் தெரிய

வில்லை; நீண்ட நாட்களாக மக்கள் மனதிலே இருந்து வந்த குமுறல், வெடித்துக் கிளம்பியதாகவே தெரிகிறது.

குமுறல் கிளம்பியபோதே, கவனித்திருப்பின், புரட்சி வெடித்துக் கிளம்பியிருந்திருக்காது.

குமுறலுக்கும் முன்பே கருத்துத் தெளிவுள்ள ஆட்சியாளர், குமுறலுக்கான குறிகள் தோன்றிடுவதைக் கண்டிடுவர்.

புன்னகை மடிந்து கவலைக்கோடுகள் மக்கள் முகத்தில் பதிந்து, கண்கள் ஒளி இழந்து, பெருமூச்சு கிளம்பிடும்போது, இனி அடக்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அல்லல் வளர்ந்து விட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம், அக்கறையும் அறிவுத் தெளிவும் உள்ளவர்கள் ஆட்சி நடத்தினால்.

அறிவுத்தெளிவு ஆள்பவர்களுக்கு இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, குறிப்பினில் நிறுத்தவேண்டிய உண்மை; அல்லற்பட்ட மக்கள் தமது மனக்குறையை அச்சமின்றி, தாராளமாக, எடுத்துக்கூறிடும் உரிமை பெற்றிருக்கவேண்டும் என்பதே அடிப்படை உண்மை.

வெடி மருந்தினைக் கெட்டித்து வைத்துள்ள 'குழாய்'போல, மனம் இருந்திடச் செய்வார்களானால், ஓர்நாள் அது வெடித்திடத்தான் செய்யும்; விபரீதம் தான் விளையும்; தடுத்திட முடியாது.

ஆட்சியாளரின் போக்கு பற்றியும், நடவடிக்கை பற்றியும், சட்ட திட்டம் பற்றியும் கட்டுக்காவல் குறித்தும், மக்கள் மனதிலே 'குறை' தோன்றிடுமானால், அதனை வெளியே எடுத்துரைக்க வாய்ப்பும் உரிமையும் இருந்திடுமானால், புரட்சி மூண்டிடாது, இரத்தக் களரி ஏற்படாது.

என்னை ஆள்பவர்கள் எப்படி ஆளவேண்டும் என்று எடுத்துரைக்கும் உரிமையும், திருத்திடவும் தடுத்து நிறுத்திடவும் உரிமையும், அதற்கு இடம் கொடாவிடின், ஆட்சி நடத்துவோரையும், தேவைப்பட்டால் ஆட்சி முறையையும் கூட மாற்றிடும் உரிமையும், புதிய ஆட்சி, புது ஆட்சிமுறை அமைத்துக்கொள்ளும் உரிமையும் எனக்கு உண்டு; நான் அந்த உரிமையுடன் என் கடமையைச் செய்திடும்போது, அலட்சியப்படுத்தவோ, அச்சமூட்டவோ, அடக்கி ஒடுக்கவோ அரசு முனையாது என்ற நிலையில் குடிமகன் இருக்கும் நாடுகளில், கனா நாட்டிலே நடைபெற்றதுபோன்ற நிகழ்ச்சி எழாது; தேவையுமில்லை.

ஆனால் கனா நாட்டுக்கு உண்மையிலேயே 'ரட்சகர்' என்றுவந்த நிக்ருமா இந்த உரிமையைத் தர மறுத்துவிட்டார். கொடுங்கோலராகி விட்டார் என்று பலரும் மனம் குமுறும்விதமாக நடந்துகொள்ளலானார்.

இது நிக்ருமாவுக்கு உள்ள இயல்பு; மக்களின் வாழ்வுபற்றி அவருக்கு அக்கறை கிடையாது; தைமூர், செங்கிஸ்கான் போன்ற இரத்தவெறி கொண்டலையும் போக்கு அவருக்கு என்றும் கூறிவிடுவதற்கில்லை.

கனா நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்தவர்; இன்னல் இழப்புகளை ஏற்றுக்கொண்டவர்; தன் நாட்டு மக்களை வாழவைக்க வேண்டும் என்று ஆர்வம் ததும்பும் உள்ளத்தினர்.

தன்னல மறுப்புபற்றி அவருக்கு ஒருவரும் கற்றுத் தரவேண்டியதில்லை, அவர் விடுதலை வீரராக விளங்கிய போது அதனை அவர் மற்றவர்களுக்கு ஊட்டியவர்.

எனவே இயல்பிலேயே அவர் கெட்டவர், ஆகவே தான் கேடான பல செய்தார்; இன்று கவிழ்க்கப்பட்டும் போய்விட்டார் என்று கூறிவிடுவதற்கில்லை.

கனா நாட்டின் விடுதலையைப் பெற்றளித்தபோது நாடே விழாக்கோலம் பூண்டபோது; வீட்டுக்குவீடு அவரை 'வழிபடும்' அளவுக்குப் பாசம் ததும்பி வழிந்தது.

அவர் அரசாள முன்வந்ததும், தங்கள் அல்லல் யாவும் அழிந்தொழிந்தது என்று நம்பினர்; களிப்புற்றனர்.

தெருவெல்லாம் ஆடலும் பாடலும்; அவர் அரசாளும் நாளை விழாவாக்கினர்.

நிக்ருமாவின் புகழ், பாடலாக்கப்பட்டது; பள்ளிப் பிள்ளைகளுக்கு அவர் வரலாறு பாடநூல்! எங்கும் அவர் ஓவியம், அவருடைய சிலை! அவர் பெயரால் புதுப்புது அமைப்புகள்!

கருப்பர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்று ஏளனம் பேசினரே வெள்ளையர், பார்க்கட்டும் இப்போது, எத்தனைப் பெரிய ஆற்றல் கொண்டவர் எமது நிக்ருமா என்பதை என்று மார்தட்டிக் கூறினர். இத்தனை இன்ப இசையுடன் துவங்கப்பட்ட ஆட்சி தான் அவருடையது. பிறகு ஏன் அருவெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க, புரட்சி செய்தேனும் போக்கத்தக்கது என்று கருதத்தக்க செயல்களை அவர் மேற்கொண்டார்? மக்களைக் கொடுமையில் உழலச் செய்யவேண்டும் என்றா? இருக்க முடியாதே! ஆனால் காரணம் என்ன, ஆட்சிகெட? அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்; எல்லாம்நானே! என்ற நினைப்புதான்.

இந்த நாட்டை விடுவித்த விடுதலை வீரன் நானே!

அடிமைகளாக இருந்த மக்களை ஆற்றல்பெறச் செய்தவன் நானே!

இந்த நாட்டை ஆளத் தகுதியும் திறமையும் படைத்தவன் நானே!

இந்த நாட்டை நடத்திச்செல்லும் உரிமை பெற்றவன் நானே!

இந்த மக்களுக்கு வளமான வாழ்வு அமைத்திட வல்லவன் நானே!

இந்த மக்களுக்கு எது நல்லது என்பதை அறியத் தக்கவன் நானே!

இப்படிப் பிறந்தது ஓர் நச்சுக்கருத்து.

விழாக்கோலம் கலைந்தநிலையில், மக்கள் ஆட்சி நிலையில், மக்கள் ஆட்சியின் பலன்பற்றிய கணக்குப் பார்த்திடும்போது, போதுமான சுவை கிடைத்திடாததால், இப்படித்தானா? என்று கேட்டிட முன்வந்தனர். வந்தது கோபம் நிக்ருமாவுக்கு!

எப்படி ஆட்சி அமையவேண்டும் என்பதுபற்றி என்ன தெரியும் — உங்களுக்கு!

எதை எப்படிச் செய்திடவேண்டும் என்பதுபற்றி அறிந்திடும் திறமை ஏது — உங்களுக்கு.

அடிமைகளாகக் கிடந்தவர்களை விடுவித்து மனிதர்களாக்கினேன் — புதுவாழ்வு தந்தேன் — உங்களுக்கு!

என்னையா ஏன் என்று கேட்கத் துணிகிறீர்கள்
என்னிடமா கேள்விகளை வீசுகிறீர்கள்.
என்னை யார் என்று தெரியவில்லையா!
என்னைப் புகழ்ந்தீர்கள், பாராட்டினீர்கள், பூசித்தீர்கள்,
என்னை வருந்தி வருந்தி அழைத்தீர்கள் அரசாள!
இப்போது கணக்கா கேட்கிறீர்கள் கணக்கு!

நான் அறிவேன், உங்களுக்கு எது நல்லது என்பதனை.

எனக்குத் தெரியும் எதை எப்படிச் செய்யவேண்டும் என்று.

என் சொல்லை நம்ப மறுக்கிறீர்களா! என்சொல்லை மீறத் துணிகிறீர்களா!

நான் இல்லாவிட்டால் கனு ஏது? விடுதலை ஏது?' ஆட்சி ஏது?

இவ்விதம் வளர்ந்தது விபரீத எண்ணங்கள்.

ஆட்சியிலே பல கோளாறுகள், திட்டங்களிலே பல தவறுகள், நிர்வாகத்திலே: பல முறைகேடுகள், இவற்றின் பயனாக மக்கள் மனதிலே குமுறல்.

குமுறல்! ஆனால் அதனை வெளியே காட்டிக்கொள்ள வழி இல்லை! உரிமை இல்லை!

நாட்டுக்கு நானே தலைவன்! நான் ஒருவனே தலைவன்!

நாட்டை ஆள நான் வைத்திருக்கும் கட்சி ஒன்றுக்குத்தான் உரிமை! வேறு எந்தக் கட்சியும் என் நாட்டில், இருந்திட நான் அனுமதிக்கப் போவதில்லை.

நோய் பிடித்துக் கொண்டது நிக்ருமாவுக்கு; ஆணவத் தடிப்பு நோய்.

ஒரே கட்சி ஆட்சியை அமைத்துக்கொண்டார். எண்ண, எண்ணியதைப் பேச, எழுத, மக்களிடம் தமது கருத்துக்கு ஆதரவு திரட்ட எந்தக் கட்சிக்கும் உரிமை கிடையாது.

மக்கள்; அதிபர்; இடையே வேறு தொடர்பு தேவையில்லை என்று கருதிவிட்டார்; மக்களைக் கெடுக்க வேண்டும் என்ற நினைப்புடன் அல்ல, எது நல்லது என்று தெரிந்துகொள்ளும் அறிவுத் தெளிவு மக்களுக்குக் கிடையாது என்ற அழுத்தமான—ஆனால் தவறான— நம்பிக்கைக் காரணமாக.

முன்பு வெள்ளையர் ஆட்சி நடத்தினர் — அவர்களின் விருப்பத்தையே சட்டமாக்கிக் கொண்டு; எதிர்த்துப் பேசும் உரிமையைத் தர மறுத்து, மீறி எதிர்த்திடத் துணிந்தவர்களைச் சித்திரவதை செய்யவும் கூசாமல்.

அவர்களை விரட்டிய வீரன் நிக்ருமா!

அவர்களை விரட்டிய எனக்கு, 'இதுகள்' எம்மாத்திரம் என்று தனது நாட்டு மக்களைப் பற்றியே ஒரு துச்சமான எண்ணத்தை வளர்த்துக் கொண்டார்.

நாலு பேர் நாலு வழி காட்டுவார்கள், நாலுவிதமாகப் பேசுவார்கள், மக்களைப் பிளவுபடுத்துவார்கள், குழப்பம் உண்டாக்குவார்கள், நல்ல காரியம் நடைபெறவிடாது முட்டுக்கட்டைப் போடுவார்கள், பதவிக்காக அலைவார்கள், போட்டிகளை மூட்டுவார்கள், பொல்லாங்கு வளரும், பொதுமக்கள் பாழ்படுவர்!— இவ்விதம் நிக்ருமா வாதிடலானார்; உரக்கக்கூட அல்ல; தமக்குள்.

இதுபோலத்தானே வெள்ளையர் வாதாடினர்; கருப்பருக்கு என்ன தெரியும்! காட்டுப் பூச்சிகள்; நாமல்லவா எல்லாவற்றையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தோம்; ஆட்சி பற்றி என்ன தெரியும் அவர்களுக்கு; அதற்குத் தேவையான அறிவுத் தெளிவும் ஆற்றலும் அவர்களுக்கு ஏது? அவர்களுக்குத்தேவை சோறு, வீடு, வேலை! இதை நாம் தந்து வருகிறோம்; போதவில்லை என்றால் மேலும் கொஞ்சம் கேட்டுப் பெற்றுக் கொள்ளட்டும்; அதை விட்டு விட்டு, உரிமை வேண்டும், ஆட்சியிலே பங்கு வேண்டும், ஆட்சி எம்முடையது ஆகவேண்டும், எங்கள் நாட்டை நாங்கள் ஆளவேண்டும் என்று கூவுகிறார்களே, எப்படி இந்தக் கூச்சலைச் சகித்துக்கொள்ள முடியும். நாடாம் நாடு! இது நாடாகவா இருந்தது நாம் வந்தபோது! இவர்கள் மனிதர்களாகவா இருந்தார்கள் நாம் நுழைந்தபோது! இப்போது உரிமை கேட்கிறார்கள் முன்பு இந்தக் காட்டிலே உலவிக்கொண்டு, வேட்டையாடி வயிறு வளர்த்துக்கொண்டு கிடந்தவர்கள்!! பாருங்களேன் அக்ரமத்தை!—என்றுதான் வெள்ளையர் பேசினர்.

நிக்ருமாவும் அதே 'முடுக்குடன்' பேசத்தொடங்கி விட்டார்! கருப்பர், வெள்ளையராகிவிட்டார்!!

கட்சிகள் கிடையாது என்று ஆகிவிட்டதும், ஆட்சியிலே நடப்பது பற்றி 'நல்லது — கெட்டது' அறிந்து கூறிடும் உரிமை பறிபோயிற்று.

சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன — நிக்ருமாவின் விருப்பப்படி.

அவை நல்லவையா அல்லவா என்பதுபற்றி ஆராய்ந்திட வாய்ப்பு இல்லை. கண்ணீர் பொழியும் நிலையில் இப்படி ஒரு சட்டமா? என்று குமுறலாயினர் குறையினை வெளியே எடுத்துக் கூறிட வழி இல்லை, மனதிலே புகை கப்பிக் கொண்டது; நச்சுப் புகை.

'ஒரே கட்சி' ஆட்சி என்ற முறையிலிருந்து, அடுத்த கட்டம் செல்வது வேகமாகி விட்டது. ஒரே கட்சிதான், ஆனால் அதிலேயும் நான் ஒருவன்தான், எதற்கும்; மற்றவர்கள் நான் சொல்வதைச் செய்திட, நான் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்ல அல்ல!—என்று 'இலக்கணம்' புகுத்திவிட்டார் நிக்ருமா! இதுவும் எல்லாம் தனக்குத் தெரியும்; தனக்கு மட்டுமே தெரியும்! என்ற நினைப்பு தடித்து விட்டதால்.

அதற்கு அடுத்த கட்டம், உடனிருந்து பணியாற்றுவோரை ஊழியக்காரர் போல நடத்துவது, கருத்து மாறுபாடு காட்டினால் கடுமையான நடவடிக்கை எடுப்பது, பதவியிலிருந்து விரட்டுவது, சிறையிலே தள்ளுவது—இப்படி சர்வாதிகாரம் வளர்ந்திடலாயிற்று.

'மந்திரிகள்' என்ற நிலையில் இருந்த பலரை, ஆத்திரத்தில் நிக்ருமா அடித்துவிடுவாராம், மந்திரி சபைக் கூட்டத்திலேயே! இப்போது தெரிவிக்கிறார்கள்!!

விடுதலைப் போராட்டத்தின்போது உடனிருந்த பல உயிர்த் தோழர்களை, தியாகிகளை, தன் கருத்தினை மறுத்தனர் என்ற காரணத்துக்காக, கொல்வது, நாடு கடத்துவது; சாகும்வரை சிறையிலே அடைத்துவைப்பது, சொத்தினைப் பறிமுதல் செய்வது என்றெல்லாம் வளர்ந்துவிட்டது ஆட்சியின் அலங்கோலம்.

ஜனநாயகத்தின் பேரால் சர்வாதிகாரம் நடத்துபவர்கள் கூட நீதி மன்றங்களுக்கு உரிய மதிப்பு அளிப்பதுண்டு. நிக்ருமா, என்னைவிட நீதியின் தன்மையை உணர்ந்தவர்களும் இருக்க முடியுமா என்ற ஆணவம் தலைக்கேறிய நிலையில், ஒரு சதி வழக்கில், நிக்ருமாவின் விருப்பத்தைக்கருதாமல் உயர்நீதிபதி, சிலரை குற்றமற்றவர்கள் என்று கூறித் தீர்ப்பளித்தபோது வெகுண்டெழுந்து, நீதிபதியை விரட்டிவிட்டதுடன் நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றவும், நீதிபதிகளை நீக்கவும், தண்டிக்கவும் தனக்கே அதிகாரம் உண்டு என்று சட்டம் இயற்றிக்கொண்டு விட்டார்.

ராணுவம் ஒன்று மட்டும் இருந்தது; தனி அமைப்பாக, தனித் தன்மையுடன்; வல்லமையுடன்.

அரசியலைக் காலடி கொண்டு வந்தாயிற்று; பாராளு மன்றம் தலையாட்டிகளின் கூடமாகி விட்டது. நீதிமன்றம் தன் பேனாமுனையின் தயவில் கொண்டு

# இந்தவாரம் இந்த நாட்டில்...



**புதுடில்லி, மார்ச். 4—** தற்போது அமுலில் உள்ள கண்ட்ரோல்களை, திட்டக் கமிஷன் மாற்றியமைக்க மறு பரிசிலனை செய்யப்படுவதாகவும், 4-வது திட்டக் காலத்தில் புதிய முறையில் இதனை மாற்றியமைப்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை, மார்ச். 4—** அவசியமேற்பட்டால், எல்லா மாவட்டங்களின் முக்கிய நகரங்களுக்கும், குழந்தைகள் உணவுக் கட்டுப்பாடு விஸ்தரிக்கப்படும் என்று மாநில உணவு அமைச்சர் வி. ராமையா அறிவித்துள்ளார். ஆனால் சென்னை நகரில் மட்டும் குழந்தைகள் உணவு தொழிற்சாலை யொன்றில் பல லட்சம் பெறுமானமுள்ள உணவு வகை தேங்கிக் கிடப்பதாகவும், பல கடைகளில் 50,000-க்கும் மேற்பட்ட பாட்டில்கள் விற்பனையாகவில்லை யெனவும், மார்ச் மாத கோட்டாவான 30,000-பாட்டில்களைக் கடைக்காரர்கள் டெலிவரி எடுக்கவில்லை யெனவும் தெரிகிறது.

**கல்கத்தா, மார்ச். 5—** மேற்கு வங்காளத்தில் நடைபெற்ற உணவுக் கிளர்ச்சி வன்முறையில் மாறியதைத் தொடர்ந்து பல நகர்களில் துப்பாக்கிச் சூடும் தடியடியும் நடைபெற்றன. பல எம். எல். ஏ.-க்கள் கைது செய்யப்பட்டனர். பல பஸ்களும், கடைகளும் தீக்கிரையாயின. பெரிய அளவுக்குச் சூறையாடல்கள் நடைபெற்றுள்ளன. ராணுவ நடவடிக்கைகள் மூலம், கிளர்ச்சியை ஒடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**சென்னை, மார்ச். 5—** தனியார் துறையிலிருந்து யாராவது முன்வந்தால் சென்னை மாநிலத்தில் பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலை தொடங்க அரசு உதவி புரியத் தயாராக இருப்பதாக அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அறிவித்துள்ளார்.

**புதுடில்லி, மார்ச். 7—** ஒரு தகராறு காரணமாக டெலிவரி எடுக்காமல் விட்ட 459 சிமிண்ட் மூட்டைகளை 6 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒன்றரைலட்சம் ரூபாய் தண்டம்கட்டி எடுத்து அதனை ரூ. 100-க்கு மட்டுமே சுங்க இலாகா ஏலம் விட்டிருப்பதாகப் பொதுக் கணக்குக் கமிட்டி அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

**புதுடில்லி, மார்ச். 9—** உணவுத் தான்யத்துக்காகப் பிற நாடுகளை நம்பிக்கொண்டிருக்கும் பழக்கம், நாட்டின் பொருளாதாரத்தைச் சரிவர நிர்வகிக்காததன் அறிகுறியாகும்; இதுவே பழக்கமாகிவிட்டால், நாம் தன்னிலையை இழந்தவர்களாகி விடுவோம். காலம் பூராவும் மாற்றார் கையை எதிர்பார்த்திடும் நிலைக்கு நாம் ஆட்பட்டுப் போவோம்" என்றார் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன்.

**புதுடில்லி, மார்ச். 10—** சீக்கியர் கோரிக்கைக் கிணங்கி "பஞ்சாபி சுபா" ஏற்படுத்த, காங்கிரஸ் கமிட்டி ஒப்புதல் அளித்துவிட்டது.

வரப்பட்டாகி விட்டது. மக்களை, உழைத்திடு! உறங்கிடு! ஊராள நான் இருக்கிறேன், அது பற்றிய கவலையைவிடு! என்ற கட்டுக்குள் அடைக்கப்பட்டாகி விட்டது. ராணுவம் ஒன்று மட்டும் தானே தலைகாட்டிக் கொண்டிருக்கிறது! அதையும் அடக்கிட முனைந்தார்! தனக்குப் பிடிக்காத ராணுவத் தளபதிகளை நீக்கினார்! தானே முதல் தளபதி என்பதை மரபு ஆக்கினார்! இனி? இனி! உலகைக் கவனிப்போம்! என்று தான் உலா கிளம்பினார், இனியும் விட்டுவைக்கக் கூடாது என்று ராணுவம் புரட்சி நடத்தி, நிக்ருமாவை நீக்கி விட்டது.

எங்கோ ஒரு நாட்டிலே நடைபெற்ற பயங்கர நிகழ்ச்சி என்ற அளவிலும் முறையிலும் இதனை நோக்கினால் முழுப் பயன் கிடைக்காது.

'ஒரே கட்சி' சர்வாதிகாரம் என்னென்ன விபரீதங்களை ஏற்படுத்தும் என்ற பாடமும்,

மக்களின் மனக்குமுறல் கவனிக்கப்படா விட்டால் பயங்கரமான விளைவுகள் எதிர்பாராத நேரத்தில் வெடித்துக் கிளம்பிவிடக் கூடும் என்ற பாடத்தையும்,

இயல்பு நல்லது, நோக்கம் கூட நல்லது என்றாலும், முறையிலே ஒரு கனிவும் மக்களை மதித்திடும் பண்பும் இல்லையென்றால், ஆட்சி அருவெறுக்கத்தக்கதாகி விடும் என்ற பாடத்தையும்,

எல்லாம் எனக்கு மட்டுமே தெரியும் என்ற இறுமாப்பினை, மன்னன்—சீமான் என்பவர் மட்டுமல்ல, அரசாள முனையும் எவருமே கொள்ளக்கூடாது மக்கள் அந்த ஆணவத்தை நெடுங்காலத்துக்குத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்ற பாடத்தையும்,

உள்நாட்டிலே மக்களை அடக்கி ஒடுக்கி வைத்துவிட்டு, 'உலகப் புகழ்' தேடிச் செல்வது, ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதாக முடியும் என்ற பாடத்தையும் பெற்றிட வேண்டும் இந்த நிகழ்ச்சியின் மூலம்.

மாற்றத்தக்கது ஆட்சி, நீக்கத்தக்கவர்கள் ஆளவந்தோர், தீர்ப்பளிக்கத்தக்கவர்கள் மக்கள் என்ற இலக்கணத்தின் அடிப்படையில் அமைக்கப்படாத அரசுகள், அடித்தளம் அற்ற கட்டடங்களாகும். மக்களின் கோபம் எனும் கடும் காற்று வீசும்போது சரிந்து விழுந்துபோகும்.

மக்கள் தமது மனதிலே பட்ட குறைகளை எடுத்துக் கூறும்போது, பொறுமையுடன் கேட்டுக் கொள்ளவும், பொறுப்புணர்ச்சியுடன் பரிகாரம் தேடித் தந்திடவும், கனிவுடன் விளக்கமளித்திடவும் முனைந்திடும் ஆட்சி ஆலெனத் தழைத்திடும்.

இந்த நல்ல இயல்பு 'ஒரே கட்சி' என்ற அரசியல் அமைப்பிலே வளராது, வாழாது, அதுபோலவே ஒப்புக்கு ஜனநாயகத்தை வைத்துகொண்டு எதிர்க்கட்சிகளை அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கும் போலி ஜனநாயக அமைப்பிலேயும் வளராது, வாழ்ந்திடாது.

இப்போது — கவிழ்த்தான பிறகு—குறைகளைக் கொட்டிக்காட்டுகிறார்கள், கனா நாட்டு ஆட்சியிலே நிக்ருமாவால் ஏற்பட்டுவிட்ட குறைகளை.

நிக்ருமாவிடம் ஆட்சிப்பிடி இருந்தபோது, வாய் திறந்திட முடியவில்லை. இப்போது தடுத்திட அவர் இல்லை. ஆகவே எத்தனைத் தொல்லைகளை இத்தனை ஆண்டுகளாகத் தாங்கிக் கொண்டோம் தெரியுமா என்று 'கதை கதை'யாகக் கூறுகிறார்கள்; கண்டனத்தைப் பொழிகிறார்கள்.

1958 ம் ஆண்டு கரு விடுதலை பெற்றபோது, இருந்த 'இருப்பு' 2000 இலட்சம் பவுன்கள்? இப்போது கரு, கடனாளியாக இருக்கிறது. யாரால்? நிக்ருமாவினால்? ஏன்? எவருடைய யோசனையையும் ஏற்க மறுத்து. தன்னிச்சையாகச் செயலாற்றி நாட்டுப் பொருளாதார யந்திரத்தையே பாழாக்கி விட்டதால். இப்படிப்பட்ட நிக்ருமாவின் ஆட்சி தொலையத்தானே வேண்டும்!—என்று கேட்கிறார்கள் விவரமறிந்தோர்; ஆம் என்கிறார்கள் உண்மை நிலைமையை உணர்ந்தோர்.

கரு நாட்டுக்கார இதழாசிரியர் ஒருவர் நிக்ருமாவின் ஆடம்பரச் செலவு பற்றிய ஒரு கணக்கு விவரம் கொடுக்கிறார், இப்போது!

பதினாறுவது நூற்றாண்டு 'சக்ரவர்த்தி' போல, கோலாகல வாழ்க்கையிலே மூழ்கிக் கிடந்தார் நாட்டிலே வறுமையைப் படர வைத்துவிட்டு என்று அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆண்டொன்றுக்கு அதிபர் நிக்ருமாவுக்கு 54,400 பவுன் சம்பளமாம்! கரு குடியாட்சித் தலைவர் என்பதற்காக 12000 பவுன்; கரு பிரதம மந்திரியாக இருந்த வகையில் பென்ஷன் 2400 பவுன்; குடும்பப் பராமரிப்பு செலவுக்காக 6000 பவுன், சுற்றுப்பயணத்துக்காக 34,000 பவுன்! மொத்தத்தில் 54,400 பவுன்!

சுற்றுப்பயணச் செலவான 34,000 பவுன், அவர் சுற்றுப்பயணம் செய்தாலும், செய்யாவிட்டாலும், தரப்பட்டாகவேண்டும்.

ஐந்து அரண்மனைகளாம் நிக்ருமாவுக்கு.

கருவை வெளிநாட்டு ஆட்சியிலிருந்து விடுவித்தாரே தவிர, நிக்ருமா தமக்கு ஆலோசனை கூற வெளிநாட்டுக்காரர் பதினைந்துபேர்களை உடன் வைத்துக் கொண்டுதான் ஆட்சி நடத்திவந்தாராம்! உள்நாட்டுக்காரர்கள்? கரு நாட்டவர்? பலர் திறமை மிக்கவர்கள், சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள். தவறு நேரிட்டால் எடுத்துக் கூறிடும் துணிவு பெற்றவர்கள் — சிறையில்! ஆட்சிக்கு எதிராக நடக்கிறார்கள், சதி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு.

மக்களுடைய வாழ்க்கைத் தரம் நாளுக்குநாள் தேய்ந்துகொண்டிருக்கிறது; நாட்டு வருமானம் போதுமான அளவு வளரவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது; இப்போது.

கரு நாட்டை இந்தச் சீர்குலைவில் வைத்துக் கொண்டு நிக்ருமா ஆப்பிரிக்காவின் மற்றைய நாடுகளுக்கு விடுதலையும் புதுவாழ்வும் காணத் துடித்தார்; இதற்காகப் பணியாற்றும் ஆப்பிரிக்க நாடுகள் ஒற்றுமைக் கழகம் நடத்த முனைந்த மாநாட்டுக்காக என்று கடனில் சிக்கிக்கிடந்த கரு நாட்டில் பலப்பல இலட்சம் பவுன் செலவிலே ஒரு அரண்மனை அமைத்தாராம்!

நாளாகவாக மேலும் பலப்பல குற்றச்சாட்டுகள் வெளியிடப்படக்கூடும்.

கரு நாட்டுப் பொருளாதாரம் கொக்கோ ஏற்றுமதியைத்தான் பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறது. நிக்ருமா ஆட்சியில் கொக்கோ பயிரிடப்படும் இடம் அதிகமாக ஆக்கப்பட்டது; ஆனால் கொக்கோவுக்கு உலகச் சந்தையில் இருந்துவந்த விலை சரிந்துவிட்டதால், கரு நாட்டுப் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது; கொக்கோ பயிரையே நம்பி வாழும் கரு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டனர்.

## இந்த வாரம் வெளிநாட்டில்...



**வாஷிங்டன், மார்ச். 4**—தென் வியட்நாமில் யு. எஸ். துருப்புகள் எண்ணிக்கை 2,15,000 பேராக உயர்த்தப்பட்டுள்ளதாக யு. எஸ். பாதுகாப்பு அமைச்சர் மக்னமாரா அறிவித்துள்ளார். தேவைப்பட்டால், ஜூலைக்குள் மேலும் 21 படைகளை அனுப்ப முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

**அபிட்ஜான், மார்ச். 5**—பதவி இழந்த கரு அதிபர் நெக்ருமாவுக்குத் தன் பதவியை விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாக கினி அதிபர் செக்டூரே வானொலி மூலம் அறிவித்தார். அத்துடன் அவரே, கினியின் ஜனநாயகக் கட்சிச் செயலாளராகவும் இருப்பார் எனவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் உள்நாட்டு அரசியல் சட்டப்படி இம்மாற்றம் நிகழ முடியுமா என்று அரசியல் பார்வையாளர்கள் ஐயுறுகிறார்கள்.

**கொழும்பு மார்ச் 6**—சில வன்முறைச் செயல்களுக்கு சதித்திட்டம் வகுத்ததாகவும், சதியில் தொடர்புகொண்டதாகவும் ராணுவ அதிகாரிகள், உயர்தர அதிகாரிகள் 51 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இது தொடர்பாக மேலும் பலர் கைது செய்யப்படலாமெனவும், இந்நடவடிக்கையின்போது இலங்கைப் பிரதமர் சேனநாயகா, பேச்சு வார்த்தைகளுக்காக வாஷிங்டனில் தங்கி இருந்ததாகத் தெரிகிறது.

**டோக்கியோ, மார்ச். 6**—ஜப்பானில் கோரமான இரண்டு விமான விபத்துக்கள் அடுத்தடுத்து ஏற்பட்டன. முதல் நாள் விபத்தில் 61 பேர் கொல்லப்பட்டதாகவும் ஒன்பதின்மர் மட்டுமே உயிர் பிழைத்ததாகவும், மறுநாள் விபத்தில் மொத்தம் விமானிகள் உட்பட 124 பேர் பலியானதாகவும் தெரிகிறது. முதல் விபத்து ஏற்பட்ட 18 மணி நேரத்தில் இரண்டாவது விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது.

**லண்டன் மார்ச். 7**—தன் தேர்தல் வேலையைத் தொடங்கிய பிரிட்டன் கன்சர்வேடிவ் கட்சி, தேர்தல் அறிக்கையில், விலைவாசி உயர்வு, பொருளாதாரச் சீர்கேடு, உள்நாட்டு விவகாரம் முதலானவைகளுக்கு முக்கியத்துவமளித்திருப்பதுடன், ஆண்டொன்றுக்கு 5,00,000 வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றையும் அறிவித்துள்ளதாம்!

**டாக்கா, மார்ச். 9**— இந்தியாவுடன் போர் ஏற்பட எவை எவை காரணமாயிருந்தனவோ, அந்த அடிப்படைகள் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றன; அந்த அடிப்படை விவகாரம் தீர்க்கப்பட்டாலன்றி, இரு நாட்டுக்கும் நிரந்தர சமாதானம் ஏற்படுவது சாத்தியமல்ல என்றார் அதிபர் அயூப்கான்.

எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப்பட்டு, உயிரூட்டமுள்ள ஜனநாயகம் நடைபெற்றிருக்குமானால், இந்தக் குறைகள் ஒவ்வொன்றும் தலைகாட்டும்போதே, கண்டனம் பிறந்திருக்கும், எச்சரிக்கை கிளம்பியிருக்கும், பொதுமக்களின் எதிர்ப்பு தோன்றியிருக்கும், நிலைமையை அரசு உணர்ந்திருக்கும், கேடு தவிர்க்கப் பட்டிருந்திருக்கும்.

ஆனால் அதற்குத்தான் நிக்ருமா வழிவைக்கவில்லையே! ஒரேகட்சி அல்லவா!! ஆகவேதான் கலம் கவிழும்போதுதான் வெளியே எடுத்துக்கூற முடிந்திருக்கிறது நிலைமையை.

ஜனநாயகம், கேடு தடுக்கப்பட வழிகாட்டுகிறது, சர்வாதிகாரம், பயங்கரமான இரத்தக் களரிக்குத்தான் அழைத்துச் சென்றிடும்.

ஜனநாயகத்தில், தவறுசெய்யும் ஆளவந்தார்கள் பதவி இழந்திடுவர்; சர்வாதிகாரத்தில் தவறு செய்யும் ஆளவந்தார், விரட்டப்படுவார், சுட்டுக் கொல்லப் படுவார்;

எனவே, ஜனநாயக முறை ஆள்பவர்களுக்கும் நல்லது, ஆளப்படுபவர்களுக்கும் நல்லது:

ஆனால் புதிதாக விடுதலை பெற்றுள்ள ஆப்பிரிக்க நாடுகள் பலவுமே, ஒரு கட்சி ஆட்சிமுறையைத்தான் மேற்கொண்டுள்ளன; அதன் விளைவாகவே, அடுத்தடுத்து பல புரட்சிகள், ஆட்சி கவிழ்க்கப்படும் அதிர்ச்சிகள், ஆளவந்தார்கள் அழிக்கப்படும் பயங்கரங்கள் நடந்தபடி உள்ளன. இவைகள், ஜனநாயக முறையினைப் பாழ்படுத்தி வருபவர்களுக்கும், 'போலி' யாக்கி வருபவர்களுக்கும், நிலைமை காரணமாக நினைப்பிலே ஆணவத்தைப் புகுத்திக்கொண்டுள்ளவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

திட்டம் காணீர்! அணை பாரீர்! ஆலைகளைப் பாரீர்! அலங்கார மாளிகைகளைப் பாரீர்! என்று கூறி மக்களை மயக்கிவிட முடியாது என்பதற்கும் கனா நிகழ்ச்சி ஒரு சான்றளிக்கிறது.

நிக்ருமா, தனக்கு ஒரு நிலையான புகழும், கனா நாட்டுக்கு வளமும் தரத்தக்கதான வோல்ட்டா நீர்த் தேக்கத் திட்டத்தை அமைத்தளித்தார். பாசனம் மட்டுமின்றி, மின்சார உற்பத்திக்கும் ஏற்றது இந்தத் திட்டம். தொழில் நடத்தும் அமைப்புகளுக்கு (அன்னியருடைய அமைப்பு) வோல்ட்டா திட்டத்திலிருந்து மின்சாரம் விற்பதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கவும் வழி கிடைக்கிறது.

என்றாலும், மற்றத் துறைகளிலே மூண்டுவிட்ட கேடுகளும், ஊழலும் ஊதாரிச் செலவும், எல்லாவற்றையும் விட அகம்பாவப் போக்கும் சர்வாதிகார முறையும், வோல்ட்டா திட்டம் பற்றி எழக்கூடிய மகிழ்ச்சியைக் கூட மங்கச் செய்து விடுகிறது.

அதுபோலவே, பிறநாட்டுத் தலைவர்களின் நேசம், தொடர்பு, தோழமை, அவர்கள் சூட்டிடும் புகழாரம் ஆகியவற்றினைக் கொண்டு, உள்ளே புரையோடிக் கொண்டிருக்கும் ஒரு ஆட்சியை நிலைநிறுத்த முடியாது என்பதற்கும் கனா ஒரு எடுத்துக் காட்டு.

சீனா எனது நண்பன், ரஷியா எனது தோழன், எகிப்து எனது நேசன், என்று பட்டியல் காட்டினார் நிக்ருமா! சொந்த நாட்டு மக்களின் கனிவைப் பெற முடியாமல், பெறுவதற்கு ஏற்ற முறையில் ஆட்சி நடத்தாமல், பிற நாடுகளிலே 'நற்சான்று இதழ்' பெறுவதிலே என்ன பலன் கிடைத்திட முடியும்?

தனி மனிதர் ஒருவருடைய புகழ், அவருடைய ஆட்சியின் அலங்கோலத்தை மூடி மறைத்திட உதவாது என்பதற்கும் கனா நிகழ்ச்சி சான்றளிக்கிறது.

உலகப் புகழ் நிக்ருமாவுக்கு! அவருடைய ஆட்சியைக் கவிழ்த்து, புது ஆட்சியை நடத்த முன்வந்திருப்பவர்களின் பெயர் இன்னும் பழக்கத்திற்கே வரவில்லை. என்றாலும், அமெரிக்காவும் பிரிட்டனும், பிரான்சும், நிக்ருமா உலகப் புகழ் பெற்றவர் — ஆகவே அவர் இல்லாத ஆட்சியை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறிவிடவில்லை; புதிய ஆட்சியைச் சட்ட சம்மதம் பெற்ற ஆட்சி என்று ஏற்றுக்கொண்டு விட்டுள்ளன.

பிரிட்டனுடைய போக்கே இதுதானே! அமெரிக்காவுடைய போக்கும் இதுதானே! என்றும் கண்டித்து விடுவதற்கும் இல்லை, இந்தியப் பேரரசும் புதிய கனா சர்க்காரை அதிகார பூர்வமான சர்க்கார் என்று ஏற்றுக்கொண்டாகி விட்டது.

எந்த நாட்டை விடுவித்தாரோ, எந்த நாட்டிலே பாதம் பட்டால் மண்ணும் மணம்பெறும் என்று கருதப்பட்டதோ, அந்த சொந்த நாட்டிலே இனி நிக்ருமா நுழைய வேண்டுமானால், பெரியதோர் படையின் துணை வேண்டும். அந்த நிலை ஒரே கட்சி' ஆட்சியின் விளைவு.

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

# ஜெயா பார்மஸி

## ஆயுர்வேத வைத்தியசாலை

**H. O.** பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

**ஆஸவங்களும் அரிஷ்டங்களும்**

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.
போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் (**Recognised by Central Board of Indigenous Madicine Madras.**) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:
உரிமையாளர்: **J. M. ராஜன்**
ஜெயா பார்மஸி
6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.
PHONE: 348, 348-A, 438

இதனை இன்னமும் உணராமல்,

செனிகால்
காம்பியா
மவுரிடானியா
மாலி
சியாரா லியோன்
லைபீரியா
அய்வரி கோஸ்ட்
டோகோ
நைஜர்
சாட்
காமிரூன்
காபன்
காங்கோ
ருவாண்டா
டான்ஜானியா
கெனியா
மாலவி
ஜாம்பியா
மலாக்சி

ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் 'ஒரே கட்சி' ஆட்சி முறையைப் புகுத்தி வைத்துள்ளனர்.

உகந்தாவில் 'சர்வாதிகாரம்' துவங்கப்பட்டு விட்டிருக்கிறது.

விடுதலை பெற்ற வேறு பல ஆப்பிரிக்க நாடுகளில் ஒப்புக்கு எதிர்க் கட்சிகள் உள்ளன; உண்மையில் சர்வாதிகாரம் நடந்து வருகிறது.

இந்த நிலை கண்டுதான் மிக்கமகிழ்ச்சி அடைந்து சீனத்து சோ-இன்-லாய் ஆப்பிரிக்காவுக்கு ஆர்வத்துடன் பலமுறை பயணம் மேற்கொண்டார்.

அவர் கரம்பட்ட இடங்களிலே ஒன்று கனு!!

விடுதலை பெற்ற நாடுகள் உண்மையான ஜனநாயகத்தை மேற்கொண்டாலொழிய வாழ்வில் வளம் இல்லை என்பதை உணர்ந்து கொள்வதற்கும், விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் என்ற விருது ஒன்றே போதும் எத்தனை அலங்கோலமான ஆட்சியையும் நடத்திக் கொண்டிருக்கலாம் என்ற நினைப்பு எத்தனை விபரீதத்தை, ஆபத்தை மூட்டிவிடும் என்பதையும் கனு காட்டுகிறது.

முப்பத்திஇரண்டு வயதுள்ள ஒரு மாது 'நீதிபதியாக' அமர்ந்து மக்கள் வழக்கு மன்றம் நடத்தி, கனு நாட்டு அதிபராக இருந்த நிக்ருமா செய்த குற்றங்களை விசாரித்து, அவருக்கு மரண தண்டனை விதித்தாராம்!

வேடிக்கைக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி. ஆனால் நிக்ருமா சிக்கினால், புதிய சர்க்கார் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனை விளக்கிட உதவுகிறது.

ஆனால் மரண தண்டனைகூட பரவாயில்லை என்று சொல்லலாம்; எந்த மக்கள் வாழ்த்தி வரவேற்றார்களோ அவர்களுடைய வெறுப்பினை, அரசியல் ஆணவம் கொண்டதால் பெற்று, ஆண்ட நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, ஆட்சி பறிக்கப்பட்டு, 'அன்றொரு நாள்' பற்றி எண்ணி ஏங்கி ஏங்கி மனம் சின்னு பின்னமாகிடும் கொடுமை, மரண தண்டனையைவிட மோசமானது.

## யாருக்காக ஐயா இது?

மூன்று திட்டங்கள் முற்றுப் பெற்ற பின்னரும்--

உணவில்லை,
உடையில்லை,
உறையுள் இல்லை,
வேலை இல்லை,
உற்பத்திப் பெருகவில்லை,
எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை,
வெளியார் உதவி போதிய அளவு கிடைக்கவில்லை,
தொழில் வளரவில்லை,
வாழ்க்கைத்தரம் உயரவில்லை,
கல்வி வசதி பெருகவில்லை,
மின்சார வெட்டை நீக்க முடியவில்லை,

ஆனால்,

"டெலிவிஷன்" கொண்டுவரப் போகிறார்களாம் பரவலாக!..,

யாருக்காக ஐயா இது?

நாட்டை விடுவித்தவர் என்ற காரணத்துக்காக மக்கள் பாசம் காட்டுகின்றனர்; அது மக்களின் நல்லியல்புக்கு எடுத்துக் காட்டு. ஆனால் பாசம் கொண்ட மக்களை, இனி இவர்களை என்ன செய்தாலும் எதிர்க்க மாட்டார்கள் என்று ஆட்சியிலுள்ளோன் எண்ணிக் கொள்வது ஏமாளித்தனம்.

நாட்டை விடுவித்த நமக்கு எதிராகவா ஒரு புரட்சி நடத்திட முடியும்; நம்மையா ஆட்சியிலிருந்து விரட்டிட முடியும் என்று நம்பிக் கிடந்தார் கனு அதிபர்.

அவர் 'ஒரு கட்சி' சர்வாதிகாரம் செய்திட முனையாமல் உண்மையான ஜனநாயக ஆட்சியை நடத்தியிருப்பின் இந்தக் 'கதி' ஏற்பட்டிருந்திருக்காது.

பாசம் கொண்ட மக்களை ஏதுமறியாதவர்கள், எதையும் செய்ய இயலாதவர்கள் என்று எண்ணிக் கொண்டு சர்வாதிகாரம் செய்தார் நிக்ருமா. படைத் தலைவர்களோ, படையைக் காட்டி அவருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். 'தன்வினை தன்னைச் சுடும்! ஓட்டப்பம் வீட்டைச் சுடும்!' என்ற பட்டினத்தடிகள் பற்றிய கதையின் நினைவுதான் பலருக்கும் வரும்—கனு அதிபரின் வீழ்ச்சி பற்றி அறியும்போது.

ஒரு நாட்டை விடுவித்த பெருமை நிக்ருமாவுக்கு. அது வரலாற்றுச் சிறப்புமிக்க புகழ், ஐயமில்லை; ஆனால் அந்தப்புகழேவா மக்களுக்கு வாழ்வு அளித்து விடும். பசி! பசி! என்று துடிப்பவனிடம், பசிபோக்கிக் கொள்ள வழி தந்திடாமல் தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டி சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகத் தூவி என்ற பாடலை இனிமையாகப் பாடிக் காட்டினால், பதறுவான், போதும்! போதும்! பசி தீர்ந்து விட்டது என்று கூறுவான்! நிக்ருமா மட்டுமல்ல தமது நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தந்தவர் என்ற விருது பெற்றவர்களில் மிகப் பலர் இது போலவே நடந்து கொள்கிறார்கள்.

அதற்குக் காரணம், விடுதலை வீரன், என்ற விருது இவர் பெற எத்தனை எத்தனை மக்கள் தமது இன்னுயிரையும் ஈந்துள்ளனர், இன்னல் இழப்புகளைக் கண்டுள்ளனர் என்பதனை மறந்து விடுவதும், கனக் கெடுக்கத் தலைநிவிட்டதுமேயாகும்.

விளக்கிலே காணப்படும் ஒளிக்கு, அதிலே ஊற்றப் பட்டுள்ள எண்ணெய்த்துளி ஒவ்வொன்றும் தன்னைத் தானே அர்ப்பணித்திருக்கிறது, திரியின் ஒவ்வொரு இழை யும் தன்னைத்தானே தந்துவிட்டிருக்கிறது, இவற்றின் மொத்த விலையே, ஒளி!

ஒரு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு வெற்றி பெற்றவர் என்ற 'விருது' ஒருவருக்கோ, ஒரு சிலருக் கோ கிடைப்பதற்காக அந்த நாட்டில் 'ஊர் பேர்' தெரியாத எண்ணற்றவர்கள் உழைத்து உருக் குலைந்து போயுள்ளனர். அவர்களின் தியாகத்தின் விளைவின் காரணமாகவே, நாடு விடுதலை பெற்றிட முடிந்தது என்ற உண்மையை உணர்ந்திடின், எத்தனைப் பெரிய விடுதலை வீரனுக்கும் ஓர் அடக்க உணர்ச்சி ஏற்படும். அந்த அடக்கம் அவனுடைய ஆற்றலைப் பன்மடங்கு அதிகமாக்கிடும். அவனது பெருமையைப் பன்மடங்கு உயர்த்திடும்.

ஆனால் இந்த இயல்பு பலருக்கு எளிதாக இருப்ப தில்லை, உச்சி செல்லச் செல்ல ஒரு மனமயக்கம் ஏற்பட்டு விடுகிறது.

எல்லாம் நானே! எதற்கும் நானே! நான் மட்டுமே! என்ற எண்ணமே தலைக்கேறி விடுகிறது. அப் போது அவர்கள் தம்மையும் அறியாமல் 'கொடுங்கோலர்' ஆகிவிடுகின்றனர்.

அப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஏற்பட்டுவிடு மானால், விடுவிக்கப்பட்ட மக்கள் மீண்டும் அடிமைக ளாக்கப்பட்டுப் போவர். ஒரு சுமை கீழே தள்ளப்பட்டு புதுச்சுமை தலைமீது ஏற்றப்பட்டுவிடும் நிலை! தலைவலி போய் திருகுவலி வந்தது என்பார்களே அந்த நிலை,

மக்கள் உரிமையும் நலனும் பெற்று வாழ்ந்திடவே விடுதலை பெறுகின்றனர்; அந்த நோக்கம் ஈடேற வேண்டுமானால், மக்கள் மனதில் தமது கருத்தினைக் கேட்டறிந்து கொண்டுதான் ஆட்சி நடத்தப்படுகிறது என்ற உணர்வு எழவேண்டும்; அந்த உணர்வு உண் மையான ஜனநாயகத்திலேதான் பெறமுடியும். அந்த உணர்வை அழித்திட்டார், ஆகவே அவருடைய முன னாள் 'புகழ்'கூட அவருக்குத் துணை நிற்க முடிய வில்லை.

அவராகிலும் உள்ளபடி விடுதலைக்காகப் பணி யாற்றியவர், பெருமைக்கு உரியவர், மக்களிடம் மார் தட்டிக் கூறமுடியும் 'நான் உங்களுக்காகப் பாடுபட்ட வன் அல்லவா? என்று. இங்கு பார்க்கிறோமே, விடுத லைக்காகச் சிறு விரலையும் அசைக்காத பேர்வழிகள் எல்லாம்கூட, அந்த முகாமில் நுழைந்து இடம் பிடித் துக்கொண்டதாலேயே, எக்காளம் கிளப்பிடும் உரிமை தமக்குக் கிடைத்துவிட்டிருப்பதாக நினைத்துக் கொள்வதை.

வியர்வை பொழியப் பாடுபட்டேன் என்று விலாப் புடைக்கத் தின்றவன், சாப்பிடும்போது ஏற்பட்ட அலுப்புக் காரணமாகச் சிந்திய வியர்வையைக் காட்டி னால "ஆமப்பா!" வியர்வை கொட்டக் கொட்டத்தான் பாடுபட்டிருக்கிறார் என்று ஏமாளியன்றி வேறு யார் ஒப்புக்கொள்வார்கள். கடுமையான வேலை முடிந்து விழா நடந்து விருந்துண்ணும்போது பந்தியிலே இடம் பிடித்துக் கொண்டதுகளெல்லாம் இங்கே 'வீரதீரம்' பேசும்போது, உள்ளபடியே நெருப்பாற்றில் நீந்தி வெளிவந்த நிக்ருமா, பெருமை பேசிக் கொள்ளக் கூடாதா? உரிமை உண்டு. ஆனால் அதையே காரண மாகக் காட்டி, கொடுங்கோலாட்சி செய்திடின்? நாடு ஒப்புக்கொள்ளாது என்பதனைக் காட்டுகிறது கனு நிகழ்ச்சி.

வெள்ளை மாளிகையில் என்ற தலைப்பில் நான் தந்து வந்த தொடர் கட்டுரையையும் இந்தக்கிழமை நிறுத்திவைத்து, கனு பற்றி எழுதியதற்குக் காரணம், இந்த நிக்ருமா தன் ஆற்றலால் கனு நாட்டை மட்டு மல்ல, கருப்பர் இனம் முழுவதையுமே விடுவிக்க வந்தவர் என்ற விருது பெற்றவர், என்றாலும் நிதானம் இழந்ததால், மக்களை மதிக்க மறுத்ததால் கவிழ்ந்து விட்டார் என்பது, ஆட்சி எவ்விதம் இருந்தால் மக்களின் நிலையான ஆதரவைப் பெற்றிடும் என்ற பொதுவான பாடத்தை, வெள்ளை மாளிகையில் என்ற தொடர் கட்டுரையுடன் இணைத்துப் படித்துக் கொள் வது பயனளிக்கும் என்பதால்.

அது மட்டுமின்றி, நான் எழுதிக்கொண்டு வந்த தொடர் கட்டுரையிலும் நிக்ருமா தொடர்பு கொள் கிறார். எங்கனம் என்பதை அடுத்த கிழமை தந்திடும் வெள்ளை மாளிகை பற்றிய தொடர் கட்டுரையில் காணலாம்.

அண்ணன்,

அண்ணாதுரை

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதறாஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு • திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதா மிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'
முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

# பாண்டியன் திருமேனி

## பதினைந்தாம் பகுதி

## அஞ்சாதீர்! அயராதீர்!!

'வணக்கம் அரசே!'

'வருக படைத் தலைவரே! இப்படி உட்காருங்கள்!'

குலசேகரன் கட்டிலை விட்டெழுந்து வந்து, ஆளவந்தார் அமர்ந்திருந்த ஆசனத்திற்கு எதிரே இருந்த உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்தான்.

'ஒற்றர்கள் என்ன செய்தி கொண்டுவந்திருக்கிறார்கள்?'

'மதுரை மன்னன் பராக்கிரம பாண்டியன், இலங்கை அரசன் பராக்கிரமபாகுவின் உதவியை நாடியிருக்கிறான்! அந்த இலங்கை அரசனும் படைகள் அனுப்புவதாக ஒப்புக்கொண்டிருக்கிறானாம்!'

'அப்படியா?'

'ஆமாம் அரசே, தாயத்தினராகிய உங்கள் இருவருக்குமிடையே ஏற்பட்டிருக்கும் இந்தப் போரில், இலங்கை அரசன் ஏன் நுழைகிறான் என்பதற்கான காரணம் தங்களுக்குத் தெரிகிறதா?'

'அதைத்தான் நானும் யோசித்துப் பார்க்கிறேன்!'

'திருவாங்கூரை ஆண்டுவந்த வீர ரவிவர்மன், முன்பு இலங்கை அரசன் பராக்கிரமபாகுவிற்குக் கப்பம் கட்டி வந்தான்! தங்கள் தந்தையார் திருவாங்கூரிலிருந்த இலங்கைப் படையைத் துரத்தியடித்துவிட்டு, அந்த வீர ரவிவர்மனைத் தோற்கடித்து, அவனைத் தமக்குத் திறை செலுத்தும்படிச் செய்தார்! அந்தப் பழைய வஞ்சத்தை மனதில் வைத்துக்கொண்டு, பழிவாங்கும் எண்ணத்தோடு, இப்பொழுது அவன் நமது எதிரிக்கு உதவி செய்ய வருகிறான்!'

'வரட்டும்! ஒரே பெயருடைய அந்த இரு கயவர்களும், ஒரே நேரத்தில் அழிவதுதான் நல்லது!'

'அரசே! இலங்கைப் படையும் வந்துவிட்டால், அதன் பிறகு அந்த மதுரைமன்னனை வெல்வதில் சிறிது சிரமம் ஏற்படலாம்! இலங்கைப் படை வரும் வரைக்கும், ஏதாவது குழப்பம் விளைவித்து, எப்படியாவது கொஞ்சம் நாட்களை ஓட்டவேண்டுமே என்ற எண்ணத்தினால்தான், அவன் நமது அரசியாரையும் சிறை பிடித்திருக்கிறான்! அவன் எண்ணம் ஈடேறுதபடி, நாளைக் காலையே நமது படைகள் மதுரையை நோக்கிச் செல்லவேண்டும்! சிங்களப் படை வருவதற்கு முன்னமே, பராக்கிரம பாண்டியன் நகர் இழந்து, நாடு இழந்து, சிறப்பிழந்து சிறையில் கைதியாக வாடவேண்டும்!'

'படைத் தலைவரே, அதுதான் சரியான யோசனை என்று எனக்கும் தோன்றுகிறது!'

கே.ஜி. இராதாமணாளன்

மறுநாள் காலை, திருநெல்வேலியைவிட்டு குலசேகரனின் படைகள் வடக்கு நோக்கிச் சென்றன.

யானை, குதிரை, மறவர் படைகளோடு, கொடி கட்டிய தேரிலே குலசேகரன், கொன்று குவிப்பேன் எதிரிகளை என்ற கோபக் கொக்கரிப்போடு வருகிறான் என்ற செய்தி பராக்கிரம பாண்டியனுக்கு எட்டி விட்டது!

'என் யூகம் தவறிவிட்டதே! இலங்கைப் படைகள் வருவதற்கு முன்னரே, வந்துவிடும்போலிருக்கிறதே ஆபத்து! பொய் ஓலை அனுப்பினேன்! அதை நம்பி கொங்கு நாட்டிற்கு அரசி காஞ்சனமாலையை அனுப்பிவைத்தான்! வழியிலேயே அவளைச் சிறைபிடித்தேன்! அந்தச் செய்தியைய அவனுக்குச் சென்று கூறும்படி, அவனது வீரனையே அனுப்பிவைத்தேன் — மொட்டையடித்து! அதைக் கேட்டதும் மனம் உடைந்து, ஒருவேளை மண்டியிட்டாலும் இடுவான் என்று எதிர்பார்த்தேன்! மண்டியிடாவிட்டாலும் அந்தக் குழப்பத்திலும் கவலையிலும் என்ன செய்வதென்று புரியாமல், சில நாட்கள் திகைத்துவிடுவான் என்று நம்பினேன்! மண்டியிட்டால் போரின்றி வெற்றி — மண்டியிடாவிட்டால், இலங்கைப்படைகளோடு திருநெல்வேலியைத் தாக்கி, வெற்றிக்கொடி நாட்டுவது-என்னுடைய இந்த எண்ணத்தில் மண் விழுந்துவிட்டதே! அவன் படைகள் மதுரையை நோக்கிச் சீறிப் பாய்ந்து வருகின்றனவே — இப்பொழுது என்ன செய்வது? என் படைவீரர்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்களை ஒரே ஒரு நன்னன் கொன்று தள்ளிவிட்டான்! அப்படிப்பட்ட நன்னன்கள், குலசேகரன் படையில் எத்தனைப்பேர் இருக்கிறார்களோ?' இவ்வாறு சிந்தித்து, பராக்கிரமன் அச்சமும் அயர்வும் கொண்டான்.

குலசேகரனை ஏமாற்ற ஏதாவது சூது கிடைக்குமா என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். அந்த இக்கட்டான நேரத்திலே, அவன் மூளையில் எந்த திட்டமும் சரியாக உருவாகவில்லை.

மதுரையினுள் குலசேகரனின் படைகள் புகுந்து, கோட்டையை வளைத்துக்கொண்டன! தலை போகும் அந்த நேரத்தில்தான், பராக்கிரமனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது!

'சீவில்லிபுத்தூரையும், அதற்கு வடக்கே உள்ள பகுதிகளையும் உன் தந்தை என்னிடமிருந்து பறித்துக் கொண்டார். எனக்கு உரிமையான அந்த இடங்களை நீ திருப்பித்தந்தால் உனது அரசி காஞ்சனமாலையை விடுதலை செய்து, உன்னிடம் ஒப்புவிக்கிறேன்! முடியாது அந்த இடங்களைத் தர என்றால், முற்றுகையை நீடிப்பேன் என்று பிடிவாதம் செய்தால், உன் அன்பிற்குரியவளை— ஆசைநாயகியை — நீ பிணமாகத்

தான் காண்பாய்!' என்று ஓலையொன்று எழுதி, அதைத் தூதுவன் மூலமாகக் கொடுத்தனுப்பினுன்.

அந்த ஓலையைப் படித்ததும், குலசேகரனின் தோள்கள் துடி துடித்தன. 'உன் அன்பிற்குரிய வளை—ஆசைநாயகியை —நீ பிணமாகத்தான் காண்பாய்!'—ஓலையில் அந்த இடத்தை அவன் திரும்பத் திரும்பப் பார்த்தான்.

'சீவில்லிபுத்தூரும் அதன் வட பகுதியும் வேண்டுமாம்! இல்லாவிட்டால், காஞ்சனுவைப் பிணமாக்கி விடுவானும்! மண்ணைத் தருகிருயா அல்லது உன் மனதிற்கிசைந்தவளை இழக்கிருயா என்று பயங்காட்டிப் பார்க்கிருன்! என் இதயத்தின் தூண்டாவிளக்கான காஞ்சனு மட்டுமல்ல, செல்வ மகன் விக்கிரமன், உற்ருர் உறவினர், ஏன் என்னையே பலி கொடுத்தாலும் கொடுப்பேனே அன்றி, பாண்டிய நாட்டு மண்ணிலே இனி அவனுக்கு ஒரு பிடியும் தரமாட்டேன்! அமைதியான முறையில் கேட்டிருந்தால், எடுத்துக் கொள் என்று சொல்லி விட்டிருப்பேன்! கள்ளத்தனமாகக் காஞ்சனுவைச் சிறையில் அடைத்த பிறகு —என் உத்தம நண்பன் நன்னனின் கண்ணைப் பிடுங்கி, உயிரைக் குடித்த பிறகு—கேட்கிருன்! காஞ்சனுவை இழக்க நேர்ந்தாலும், நன்னனைப் பிணமாக்கிய அந்த மாமிசப் பிண்டத்திற்கா விட்டுக் கொடுப்பது? முடியாது! நிச்சயமாக முடியாது!' என்ற தீர்மானத்தோடு, அருகிலிருந்த ஆளவந்தாரை ஏறிட்டுப் பார்த்தான்.

"அரசே! பராக்கிரமன் ஈவு இரக்கமற்றவன்! பழி பாவத்திற்கு அஞ்சாதவன்! சொல்லியபடியே! அரசியாருக்கு ஏதாவது தீங்கு செய்தாலும் செய்துவிடுவான்!"

"அதற்குப் பயந்து, அதிகாரத்தோடு அவன் கேட்பதைக் கொடுத்துவிட வேண்டும் என்கிறீரா?"

"அவனைப்போல நாமும் ஏன்சூது செய்யக் கூடாது? கேட்டபடியேதருவதாக ஒத்துக் கொண்டு, அரசியார் விடுதலையானதும் — தாக்கி அவனைத் தவிடுபொடியாக்கினுல் என்ன?"

"அத்தகைய கோழை முறையில் விடுவித்தால், காஞ்சனு என்னை ஏறிட்டுப் பார்க்கக்கூடக் கூசுவாள்! வீரமகள் அவள்! தன் கணவன் கோழையாவதை ஒருபோதும் அவள் சகிக்கமாட்டாள்! போரிட்டே காஞ்சனுவை மீட்கவேண்டும் — அதுதான் வீரம்! அந்தத் தமிழச்சிக்கும், அதுதான் பெருமை!"

"இப்படி வீரம் பேசி, அரசியாருக்கு ஏதாவது விபரீதம் நேரிட்டு விட்டால்?"

"அதையே திரும்பத் திரும்பச் சொல்லி, என்னை வளைந்து தரும்படிச் செய்யாதீர்! என்ன நேர்ந்தாலும் இனி நான் அஞ்சப் போவதில்லை! நன்னனைப் பலி கொடுத்தோமே, அன்றே காஞ்சனுவையும் இழந்துவிட்டோம் என்று எண்ணிக்கொள்ள வேண்டியதுதான்!...

படைத்தலைவரே' அவன் கோட்டையை இடிக்கும்படி உத்தர விடுங்கள்! வலிமையுள்ளவர்கள் நாம்! படைபலம் நம்மிடம் அதிகம் இருக்கிறது—நன்ருகத் தெரிகிறது! இந்தச் சமயத்தை நாம் நழுவவிடக் கூடாது! அவனுக்கு இருக்கும் வலிமை, காஞ்சனுவைச் சிறையில் அடைத்து வைத்திருப்பதுதான்! அதைக் காட்டியே அவன் நம்மை மிரட்டிப் பணியவைக்கப் பார்க்கிருன்! காஞ்சனுவின் உயிருக்கு ஆபத்து என்ருல், அவன் பாதங்களில் நாம் சரண்புகுவோம் என்று அந்தக் கீழ்மகன் எதிர்பார்க்கிருன்! அவன் நினைப்பை நிர்மூலமாக்க வேண்டும்! அவன் அரசை புழுதி மேடாக்க வேண்டும்!...சேர, சோழ நாடுகளுக்கு இணையாகப் பாண்டிய நாடு தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமே அன்றி — அது இனியும் இரு துண்டுகளாக - வளம் குன்றி, வலிமை சிதறி நோயாளியைப்



போலிருப்பதை, என்னால் சகிக்க முடியாது! சிங்கங்களின் இருப்பிடமாக இருக்கவேண்டுமேயன்றி, குள்ளநரிகள் ஊளையிடும் பிணக்காடாக இனியும் இருக்க ஒப்பேன்! பரந்த பாண்டிய அரசின் காவலன் என்ற வீண் பெருமைக்காகப் போர்க்களம் புகவில்லை நாம்! பாண்டிய நாடு ஒன்றாக வேண்டும்! எந்தத் துறையிலும் அன்னியருக்கு அடிமையில்லாத எழில் மிக்க பகுத்தறிவுச் சோலையாக, அது விளங்கவேண்டும்! அத்தகைய பாண்டியநாட்டை நான் ஆண்டாலும் சரி! அல்லது இந்தப் பராக்கிரமனே ஆண்டாலும் சரி! பாண்டிய பொன்னாட்டிற்கு வாழ்வு உண்டாஇல்லையா என்பதை முடிவு செய்யவே, இப்போர் மூண்டிருக்கிறது! இதிலே காஞ்சனாவை இழப்பதா, திரும்பப் பெறுவதா என்பதல்ல முக்கியம்! பாண்டிய நாடு ஒன்றாகி பண்டைய சிறப்பைப் பெறவேண்டும், வீரத்தின் விளைநிலமாக, விவேகிகளின் பிறப்பிடமாக அது புகழ் மணக்க வேண்டும்— இதுதான் நம் இலட்சியம்! இந்த இலட்சியத்திற்காக, இப்போர்க் களத்திலேயே நீங்களும் நானும் கூடப் பிணங்களாக விழலாம்! இனி பொறுத்துப் பயனில்லை! படைத் தலைவரே, நாளையதினம் மதுரைக் கோட்டை தரைமட்டமாக வேண்டும்!' என்று வீரமுழக்கமிட்டான், குலசேகரன்.

மறுநாள் காலை கதிரவன் உதயமாவதற்கு முன்னரே, பராக்கிரம பாண்டியனின் கோட்டையைத் தாக்கித் தகர்க்கும் வேலையில், போர்வீரர்கள் மிகுந்த உற்சாகத்தோடு ஈடுபட்டனர். கோட்டையின சுவர்கள் சரியத்தொடங்கின. எதிர்த்த மதுரை வீரர்களோ, பிணங்களாகக் குவிந்தனர்.

சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான்! இன்னும் சிறிது நேரததில் குலசேகரனின ஆட்கள் உள்ளே புகுந்துவிடப்போகிறார்கள்! போரோ உச்சநிலையில் நடந்துகொண்டிருந்தது!

"அதோ! அதோ!" என்று வீரர்கள், கோட்டையின்மீது விழிகளைச் செலுததினர்!

கையில் விலங்கிட்ட காஞ்சனமாலையோடு, கோட்டையின் கொடி மரத்தின் அருகே பராக்கிரமன் வந்து நின்றான்!

"குலசேகரா இப்படிப்பார்! நன்றாகப்பார்! இதோ உன் அரசி! இதோபார் என் கையிலே போர் வாள்! இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? என் ஓலையின்படி நடந்து கொள்கிறாயா, அல்லது இவளை இப்பொழுது இதே இடத்திலேயே —உன் கண்ணெதிரிலேயே—பிணமாக்கட்டுமா?" என்று உரத்த குரலிலே பராக்கிரமன் பேசினான்.

குலசேகரனின் நிமிர்ந்த விழிகள் கண்ணீரால் மூடிக்கொண்டன. "காஞ்சனா! காஞ்சனா! உன்னைப் பலிகொடுத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது, என் கண்ணே!" என்று அவன் இதயம் கதறியது.

"வேண்டாம்! என்னைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக, எதையும் நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டாம்! நான் சாகிறேன்! இந்த வஞ்சகனின் கோட்டைச் சுவர்கள், இதோ சரிந்து விழுந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறேன்! பார்த்துப் பார்த்துப் பூரிக்கிறேன்! அந்தப் பூரிப்போடே சாகிறேன்! மேற்குத் திசையில் பகலவன் விழுவதற்கு முன்னரே, இந்த மோசக்காரனின் உடல் தரையில் பிணமாக விழப் போவதை எண்ணிக்களிக்கிறேன்! அந்தக் களிப்போடே, நான் சாகிறேன்! எனக்காக நீங்கள் கண்ணீர் விடாதீர் — கவலை அடையாதீர்— கயவர் கூட்டத்தின்மீது பாயுங்கள், கொல்லுங்கள்! வீரததாயின் மகனாகப் பிறந்தவன் என்று என் செல்வன் விக்கிரமன் பெருமைப்படுவதற்காக—தரணியிலே அவன் தலை நிமிர்ந்து நடப்பதற்காக — நான் சாகத்துணிந்துவிட்டேன்! சஞ்சலப்படாதீர்! சமரை நிறுத்தாதீர்! இந்த இரத்தக்களத்திலிருந்துதான் முளைத்தெழப் போகிறது, செந்தாமரை! ஆமாம் பாண்டிய நாட்டின் மறுமலர்ச்சி! அந்த இலட்சியத்திற்காகப் போரிடுகிறீர் — எனக்காக அல்ல! அஞ்சாதீர்! அயராதீர்! இந்த அக்கிரமக்காரனைப் பூண்டோடு அழிக்கும்வரை நீங்கள் துஞ்சாதீர்!" என்ற காஞ்சனமாலையின் வார்த்தைகள், தெனபாண்டிநாட்டு வீரர்களின் நரம்புகளை முறுக்கேற்றின!

"அஞ்சாதீர்! அயராதீர் தாக்குங்கள்! தாக்குங்கள்!"

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, தேரில் எழுந்து நின்று குலசேகரன் கட்டளையிட்டான்!

"அய்யோ!" வீரர்கள் கதறினர்! பராக்கிரமன் வாள், காஞ்சனாவின் தலையைத் தரையில் விழும்படிச் செய்துவிட்டது!

"அய்யோ காஞ்சனா!" முகத்தை மூடிக்கொண்டு, குலசேகரன் தேரில் உட்கார்ந்துவிட்டான்.

"செத்துக்கிடக்கும் அரசியாரை ஒருமுறை பாருங்கள்! சிங்கக் கூட்டமே சீறியெழுங்கள்! தாக்குங்கள்! தாக்குங்கள்! மங்கையர் திலகத்தைப் பிணமாக்கிய மதோன்மத்தனைத் துண்டு துண்டாக வெட்டுங்கள்! அவனது மனைவி மக்களைக் கொன்று குவியுங்கள்!" என்று கொக்கரித்தார், படைத்தலைவர் ஆளவந்தார்.

வீரர்களின் அம்புகள் பறந்தன! வேல்கள், ஈட்டிகள் பாய்ந்து சென்றன! களிறுகள் கோட்டைக் கதவுகளைத் தூளாக்கின!

மறைந்து ஓடி உயிர் தப்ப பராக்கிரமன் முயற்சி செய்தான்—முடியவில்லை! ஆத்திரங்கொண்ட படை வீரர்களின் கையிலே சிக்கிக் கொண்டான்! அவன் உடல் பல துண்டுகளாயின! அவனது மனைவியும் குழந்தைகளும் உருத்தெரியாமல், இரத்த வெள்ளத்தில் மிதந்தனர்!

மதுரையின் சிம்மாசனத்திலே அமர்ந்தான், குலசேகரன். வட தென்பாண்டிய நாடுகள் ஒன்றாகி விட்டன. மதுரையிலே வெற்றி விழா கொண்டாடிய நேரத்தில்— ஈழத்துப்படை இராமேஸ்வரத்தைக் கைப்பற்றிய செய்தியைக்கொண்டு வந்தான், ஒரு போர்வீரன்!

[ வளரும் ]

## விற்பனையாளர்களுக்கு

மார்ச் இறுதியுடன் ஆண்டுக் கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால் ஏஜண்டுத் தோழர்கள் பாக்கித் தொகைகளை மார்ச் மாத பில்லுடன் சேர்த்துத் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

உரிமையாளர்
"காஞ்சி"

# கேள்வி--பதில்!

(1) "மறுபரிசிலனை" என்றால் என்ன?

ஒரு கொள்கையின் மீது முன்னதாகவே எடுக்கப்பட்ட முடிவை, அது தவறானது-நடைமுறைக்கு ஒத்துவரவில்லை - என்பதைப் புரிந்துகொண்டு, "தாம் முதலாக எடுத்தமுடிவில் காணப்படும் குறைபாடுகளைக் களைய முயற்சிப்பதுதான் அரசியல் அரங்கில் "மறுபரிசிலனை" என்று கூறப்படுகிறது. நேருவின் காலத்தில் இந்த சொல்லுக்கே தேவையும், உரிமையும் இன்றி இருந்தது. லால்பகதூர் காலத்திலும் அப்படித்தான் என்றாலும், கடந்த ஆண்டு மொழிக் கிளர்ச்சியின் போது, சென்னை வந்த இந்திரா அம்மையார், லால்பகதூர் சார்பில் மொழிப் பிரச்னையில் மறுபரிசிலனை தேவைதான் என்று ஒரு வார்த்தையை உகுத்து விட்டுப்போனார். இந்த ஆண்டு மேற்குவங்க உணவுக்கிளர்ச்சி, ஒரு எல்லையைத் தாண்டிவிட்ட கட்டத்தில், அதே அம்மையார், பிரதமராக நின்றுகொண்டு, உணவுக் கொள்கையில் மறுபரிசீலனை தேவை என்று சொல்லி இருக்கிறார்.

ஒரு மனிதனுக்கு மொழியும், உணவும் இரு கண்களைப்போல்வன. இந்திய அரசின் இந்த இரு கண்களும் பழுதுபட்டுள்ளன என்பதைப்பிரதமர்இந்திராகாந்தி ஒப்புக்கொண்டுவிட்டிருக்கிறார். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும், கண்கள் மீண்டும் ஒளிபெறுமா, உள்ள பார்வையும் ஒழிந்துபோகுமா என்பதை!

(2) வங்க, அஸ்ஸாம் விவகாரங்கள் காரணமாக 'நெருக்கடி நிலை; பாதுகாப்புச் சட்டம்' இவைகளை வாபஸ் பெறுவதைத் தள்ளிவைக்கப்படும் என்கிறார்களே முறையா?

முறையா? முறையா? என்று கேட்க, காங்கிரஸ் ஆட்சியாளரிடம் ஆயிரம் விஷயங்கள் உண்டு. 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற குறட்பா, இப்படியொரு கூட்டம் இந்த நாட்டை ஆளவரும் என்பதை அறிந்துதான் எழுதப்பட்டதோ என்னவோ? 'கேரளத்து உணவுக் கிளர்ச்சிக்கும், எல்லையில் தேவைப்படும் பாதுகாப்புக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை' யென்று வடநாட்டு இதழ் ஒன்று தலையங்கம் எழுதியுள்ளது. அப்படித்தான் இருக்கிறது, நெருக்கடி நிலை, பாதுகாப்புச் சட்டங்களைத் திரும்பப்பெற, அஸ்ஸாம், வங்காளம் விவகாரங்களை ஒப்பிட்டுக் காட்டுவது.

(3) எல்லா கேள்விகளுக்கும் உங்களால் பதில் சொல்லமுடியுமா?

முடியும் என்று நிச்சயமாகச் சொல்லிவிடுவேன். ஆனால் முடியாதவையும் சில உண்டு. அதாவது காங்கிரசார் ஆளவந்த இந்த 19 ஆண்டுக் காலத்தில் இந்த நாடு, சுடுகாடாக்கப்பட்டதன் காரணத்தைச் சொல்ல முடியாது; மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முதலீட்டுத் தொகையின் பெரும்பகுதி பதுங்கிக்கொண்ட இடத்தைச்சொல்ல முடியாது, எங்கெந்த திட்டங்களில் முதலீடு செய்தார்களோ, அந்தந்தத் திட்டங்களால், இந்த நாட்டுக்குக் கிடைத்த பெரும் பயன்—என்னவென்று சொல்ல முடியாது; ஆண்டுக்கு ஆண்டு, பிணக் குவியலைப் பெருக்கி, அதைக் கண்டு பெருஞ் சிரிப்பு சிரிக்க, காங்கிரசாருக்கு மட்டும் எப்படி முடிகிறது என்பதன் காரணத்தைச் சொல்ல முடியாது; குந்தா மின்சாரத் திட்டம், இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, ஆவடி டாங்கித் தொழிற்சாலை, இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை முதலானவைகள், தங்கள் உற்பத்திச் சாதனைகளால் இந்த நாட்டின் (1947-க்குப் பிறகு மட்டும்) பற்றாக் குறைகளைத் தீர்த்து, உபரிஉற்பத்திகளால் எவ்வளவு அந்நியச் செலாவணி ஈட்டிக் கொடுக்கின்றன என்பதை எந்த அளவுக்கு மக்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதை இதழ்கள் நடாத்துவோர் எப்படி அறியாமலிருக்கிறார்கள் — மூடி மறைககிறார்கள் என்பதைச் சொல்ல முடியாது. மற்றொன்றும் முடியாது, தலைப்பட்ட சில "புதிய காங்கிரசுகள்" விலைப்பட்ட தொகை எவ்வளவு என்பதைக் காட்ட!"

(4) அறியாமை என்பதற்கு நீங்கள் தரும் அரசியல் விளக்கம் என்ன?

இதழில் இடமில்லை என்கிறார்கள் விளக்கம் தர! சுருக்கமாகச் சொல்கிறேன். பெற்ற கூலிக்கு ஒழுங்காக மாரடிக்கும் சிலரால், உண்மையான செய்திகள் மறைக்கப்பட்டு — திரிக்கப்பட்டு புதிய செய்திகளை "உண்டு பண்ணி" துணிகரமான தலைப்பிட்டு வெளியிடப்படும் செய்திகள் புரிந்துகொள்ளப்படாமல், 1967-க்குப் பின்னரும் காங்கிரசே ஆட்சிப் பொறுப்பேற்குமானால், அதுதான் இந்த நாட்டவரின் அறியாமையாகும்!

(5) நாட்டு முன்னேற்றத்திற்காக வெளிநாட்டுக் கடன் உதவிகள் பெறுவதோ, அதனால் இந்தியக் குடிமகன் கடன்படுவதோ தவறு என்று எப்படிக் கூறமுடியும்?

கூறக்கூடாது என்கிறீரா நீ? வெளிநாட்டுக் கடன் உதவி பெற்று, திட்டங்கள் செயற்பாட்டில் லாபம் கொழித்து உள்நாட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் அளவில், இருந்தால் தவறில்லைதான்! லாபம் இல்லையென்றாலும் பரவாயில்லை, பெரிய பெரிய பேரிழப்புக்கள் அல்லவா ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. முடை நாற்றத்தை மூடிவைக்க வேண்டும் என்கிறீர் நீர். ஆனால் அமெரிக்க அரசின் விவசாய இலாகாக் காரியதரிசி பிரீமென் "...அமெரிக்க உதவியை ஒரு ஊன்றுகோலாக மற்ற நாடுகள் அளவுக்கு அதிகமாக நம்பி இருந்தால் அது அவற்றின் வேளாண்மை முடமாவதற்கு வழிகோலிவிடும்" என்கிறார். திட்ட ஆண்டுகள் அனைத்தும் தேய்ந்துபோன பின்னால் இந்தியக் குடிமகனின் நாள் வருவாய் 13 5 காசுகள்; ஆனால் கடனோ, ரூ. 85. தற்போதைய பிரீமென் பேச்சையும், அண்மையில் செஸ்டர் பௌல்ஸ் கூறிய "உதவிகளைக் கண்காணிக்கும் பொறுப்பு அமெரிக்காவுக்கு உண்டு" என்பதையும், ஜானஸன் கூறிய, "இந்தியத் திட்டங்களையும், கொள்கைகளையும் முழுமையாக ஆராயவேண்டும்" —என்பதனையும் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, கடன்படுவது நல்லதா, தீயதா என்பதை நீர் உணர்வதுடன், உம்போன்றார்க்கும் உணர்த்துவீராக!

O

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்